

மங்கையர்க்கரசியார்

# நினைவுக் கருவூலம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
14-09-1932

திருவடி
22-05-2006

திருமதி
# மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
அவர்கள்

நோயுற்றடராமல் நொந்து மனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பாவியேன் - காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கி யெனை ஒண்போரு ரையாநின்
சீரடிக் கீழ் வைப்பாய் தெரிந்து.

- திருப்போரூர் சந்நிதி முறை

திதி: விய ஆண்டு வைகாசி 08 ஆம் நாள் (22-05-2006)
தேய்பிறைத் தசமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம் ஆதி மயிலணி

குலமுறைச் செந்தமிழ்ச் சிவமணி

**திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்**

**அம்மையார்**

# நினைவுக் களஞ்சியம்

**11-06-2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அமைந்துள்ள யோகமண்டபமே இது. அமரரின் பெருமுயற்சியாலேயே இம் மண்டபம் உருவாக்கப்பட்டதாகவும், 400 ஆசிரிய மாணவர்கள் தியானத்தில் ஈடுபட இது உதவுவதாகவும் கலாசாலை அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் பெருமையுடன் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பன்னிரு திருமுறைத் திருவருட் பாடல்கள்

## தேவாரம்

### அருளியவர் - திருஞானசம்பந்த சுவாமிகள்

**திருமுறை - 01**

**தலம் - மயிலாடுதுறை**

**பண் - தக்கராகம்**

திருச்சிற்றம்பலம்

1. தொண்டரிசை பாடியுங் கூடிக்
கண்டு துதி செய்பனூராம்
பண்டும் பல வேதிய ரோத
வண்டார் மயிலாடு துறையே.

**தலம் - திருவலிவலம்**

**பண் - பழந்தக்கராகம்**

2. தாயு நீயே தந்தை நீயே சங்கரனே யடியேன்
ஆயுநின் பாலன்பு செய்வானாதரிக் கின்றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னு ளைவர் நின்றொன்ற வொட்டர்
மாயமே யென்றஞ்சு கின்றேன் வலிவலமேயவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமுறை - 02** **தலம் - திருவையாறு**

**பண் - மேகராகக் குறிஞ்சி**

3. புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந் திட்டைம் மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள் செய்வானமருங் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்
பார்க்குந் திருவையாறே.

**தலம் - திருக்கேதீச்சரம்**

**பண் - நட்டராகம்**

4. நல்லராற்றவும் ஞான நன்குடையர்
தம் மடைந்த வர்க்கருளிய
வல்லார் பார்மிசை வான் பிறப் பிறப்பிலர்
மலிகடன் மாதோட்டத்
தெல்லையில் புகழ் எந்தை கேதீச்சர
மிராப்பகல் நினைந் தேத்தி
அல்லலாசறுத் தானடி யிணை தொழு
மன்பரா மடியாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறை - 03

தலம் - கோணேசுவரம்

பண் - புறநீர்மை

5. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பால் நீக்கி
நுழைய தரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோண மாமலை யமர்ந்தாரே.

தலம் - திருப்பூந்தாராய்

பண் - காந்தாரபஞ்சமம்

6. பந்து சேர் விரலாள் பவளத்துவர்
வாயினாள் பனிமாமதி போல் முகத்
தந்தமில் புகழாள் மலை மாதொடு மாதிப்பிரான்
வந்து சேர் விடம் வானவ ரெத்திசையு
நிறைந்து வலஞ்செய்து மாமலர்
புந்தி செய் நிறைஞ்சிப் பொழிபூந்தாராய்
- போற்றுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளியவர் - திருநாவுக்கரசு சுவாமிகள்

திருமுறை - 04

தலம் - திருவதிகை வீரட்டானம்

பண் - கொல்லி

07. பலபல காமத்தராகிப் பதைத் தெழுவார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந்திரண்டு சுடரும் வான்கயிலாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடை யாரொருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை.

தலம் - திருவையாறு

பண் - திருவிருத்தம்

08. களித்துக் கலந்த தோர் காதற் கசிவொடு காவிரி வாய்க்
குளித்துத் தொழுது முன்நின்ற இப்பத்தரைக் கோதில் - செந்தேன்
தெளித்துச் சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ் செல்வமாக்கும் ஐயாறன் - அடித்தலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமுறை - 05** **தலம் - கோயில்**

**பண் - திருக்குறுந்தொகை**

09. பனைக் கைமும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனங்கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுது மறந்துய்வனோ.

**தலம் - கோயில்**

**பண் - திருக்குறுந்தொகை**

10. அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கும் மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே.

**திருமுறை -06**

## தனித்திருத்தாண்டகம்

11. திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன் முன் மலர் பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெட வெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்த வாறேதோ வென்னிற்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அத்தாவுன் அடி யேனை அன்பாலார்த்தாய்
அருள் நோக்கில் தீர்த்த நீராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியை நீ எளியை யானாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாயன்றே
இத்தனையும் எம்பரமே ஐயஐயோ! எம்
பெருமான் திருக்கருணை யிருந்தவாறே.

## அருளியவர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்

**திருமுறை - 07** **தலம் - கோலக்கா**

**பண் - தக்கேசி**

13. நாளுமின்னிசையாற் றமிழ் பரப்பு
ஞான சம்பந்தனுக் குலகவர் முன்
தாள மீந்தவன் பாடலும் இரங்குந் தன்மை
யாளனை யென் மனக்கருத்தை
ஆளும் பூதங்கள் பாட நின்றாடும்
அங்கணன் றனை யெண்கண மிறைஞ்சுங்
கோளிலிப் பெருங் கோயிலுள்ளானைக்
கோலக்காவினிற் கண்டு கொண்டேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் - கேதாரம்

பண் - நட்டபாடை

14. நாவின் மிசையயையன்னொடு தமிழ் ஞானசம்பந்தன்
யாவர் சிவனடியார் களுக் கடியானடித் தொண்டன்
தேவன் திருக்கேதாரத்தை யூரன் னுரை செய்த
பாவின் தமிழ் வல்லார் பர லோகத்திருப்பாரே.

## அருளியவர் - மாணிக்கவாசகசுவாமிகள்

திருமுறை - 8

திருவாசகம்

15. தாமே தமக்குச் சுற்றமும் தாமே
தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாய மிவை போகக்
கோமான் பண்டைத் தொண்ட ரொடும்
அவன் தன் குறிப்பே குறிக்கொண்டு
போமாறமை மின் பொய் நீக்கிப்
புயங்கள் ஆள்வான் பொன்னடிக்கே.

16. பாருரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமையும் பெற வேண்டும்
சீருருவாய சிவபெருமானே
செங்கமல மலர் போலும்
ஆருரு வாய என் ஆரமுதே
உன் அடியவர் தொகை நடுவே
ஓருரு வாய நின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக் கொண்டருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவையார்

17. சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்து மென் சிந்தையுள்ளும்
உறை வானுயர் மதிற் கூடலின்
ஆய்ந்த வொண்டீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி
யேழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட் கென்கோ
லாம் புகுந் தெய்தியதே.

## அருளியவர் - நம்பிகாடநம்பி

**திருமுறை - 09**

**திருவிசைப்பா**

18. பத்தியாயுணர் வோரருளை வாய் மடுத்துப்
பருகு தோறமுத மொத்தவர்க்கே
சித்தியா விருக்குந் தேவர் காளிவர் தந்
திருவுரு விருந்தவாபாரீர்
சத்தியாய்ச் சிவமாயுலகெலாம் படைத்த
தனிமுழு முதலு மாயதற் கோர்
வித்து மாயாரு ராதியாய் வீதி
விடங்கராய் நடங்குலாவினரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளியவர் - சேந்தனார்

### திருப்பல்லாண்டு

19. நிட்டை யிலா வுடனீத் தெனையாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித்
தட்ட மூர்த்திக் கென்னக நெகவூறும்
அமிர்தினுக் கால நிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

**திருமுறை - 10**

## அருளியவர் - திருமூலர்

### திருமந்திரம்

20. பிறப்பறியார் பலபிச்சை செய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பிலராகிய மாதவஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமை பெற்றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமுறை - 11**

## அருளியவர் - காரைக்காலம்மையார்

## அற்புதத் திருவந்தாதி

21. இறைவனே யெவ்வுயிருந் தோற்றுவிப்பான் றோற்றி
யிறைவனே யீண்டிறக்கஞ் செய்வா - னிறைவனே
யெந்தாயென விரங்கு மெங்கண்மேல் வெந்துயரம்
வந்தாலது மாற்று வான்.

**திருமுறை - 12**

## அருளியவர் - சேக்கிழாரடிகள்

## திருத்தொண்டர் புராணம்

22. அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழி புடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னு திருக்கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழ விடையார் தமைப் போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச்சரத் தண்ணல் செய்ய பாதம்
உன்னி மிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாத இழிபெற்றார் உவகை யுற்றார்.

23. கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம் பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினொரு தலைமுறைக் கல்விப் பாரம் பரியத்தில் வந்த அம்மையார்

சுன்னாகம் இயற்கைப் புலவர்கள் - கவிராயர்கள், பண்டிதர்கள் பலரைப் பண்டு தொட்டுக் காலத்திற்குக் காலம் தந்து கொண்டிருக்கின்றது. அவர்களின் அருமை பெருமை எங்களுக்குச் சில சமயம் தெரியாது இருக்கலாம். ஆயின் தமிழ்த்தாயை நேசிக்கும் உத்தம அறிஞர் உலகம் ஏத்திப் போற்றுகின்றது. சிவஸ்ரீ வரத பண்டிதர், முத்துக்குமார கவிராயர், முருகேசபண்டிதர், நாகநாதபண்டிதர், சங்கரபண்டிதர், குமார சுவாமிப்புலவர், மாணிக்கத் தியாகராய பண்டிதர், நமசிவாயம்பண்டிதர் போன்றோர் குறிப்பிடத்தக்கவோராவார். இன்னும் பல பாவலர்கள் உளர். இனி எதிர் காலத்திலும் இப்படியான புலவர்கள் தோன்றுக என நாமும் பெரும் பொருளை வேண்டுதல் செய்வோமாக. இன்னும் மேலே காட்டிய பெரும் புலவர்களுடன் சைவக் கிரியை கைவந்த வடமொழி அறிவு நிரம்பிய வேதாரணியச் சைவக் குருமார்களாகிய சுவாமிநாத தேசிகர் நமசிவாய தேசிகர் ஆகியோரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இங்கு மேலே கூறிய குமாரசுவாமிப்புலவரை மையமாக வைத்து மங்கையர்க்கரசியாரின் வாழ்நாள் குறிப்பைக் காண்போம். இங்கு வெளியாகும் கருவூலத்தின் இணைப்பின் புலவரவர்களின் சந்ததியாரின் தொன்மையைக் காணலாம்.

முத்துக்குமார கவிராயரும் சின்னத்தம்பியும் சகோதரர்கள் இவர்கள் அம்பலவாணரின் பிள்ளைகள். நிலவுடைமை உள்ளவர். கட்டுமட்டான குடும்பத்தவர்கள்.

சின்னத்தம்பி மனைவி காமாட்சியம்மை மகன் அம்பலவாணர், அம்பலவாணர் சிதம்பரம்மை மகன் குமாரசுவாமிப்புலவர். இவருக்கு மயில்வாகனம் மகள் சின்னாச்சி அம்மையாருக்குத் திருமணம் 1892 இல் நடைபெற்றது. இத்தாம்பத்திய வாழவில் தோற்றியோரே விசாலாட்சி அம்பலவாணர் - முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை ஆகியோர்.

இயற்கை எய்திய திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பல அம்மையாரின் வாழ்நாள், குறிப்புக்கள்:-

- பெற்றோர்: கு. முத்துக்குமார சுவாமிப்பிள்ளை - இயற்கை 14-02-1987
  கமலாம்பிகை - இயற்கை 22-08-1981
- பிறந்தநாள்: 14-09-1932
- பிறப்பிடம்: மயிலணி - சுன்னாகம்
- சகோதரர்கள்: ஆண் இரண்டு + பெண் ஒன்று = மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குலதெய்வம்: மயிலணி முருகமூர்த்தி
- ஏடு தொடக்கல்: 1940 புராட்டாதி விஜய தசமியன்று. முருகமூர்த்தி கோயில் பிரதம சிவாசாரியர்.
- ஆரம்ப கல்வி: மயிலணிச் சைவத் தமிழ்ப்பாடசாலை இதன் ஸ்தாபகர் இவரின் தாய்வழிப்பேரன் தி.குமாரசாமி.
- ஆரம்ப ஆங்கில இடைநிலை உயர்கல்வி: இராமநாதன் பெண்கள் கல்லூரி சுன்னாகம். இங்கு 1942 தொடக்கம் 1951 வரை. 5 ஆம் வகுப்புத் தொடக்கம் சி. த. சா. (S.S.C) பரீட்சைச் சித்தி 1949. 1950– 51 வரை உயர்தர சான்றிதழ் H.S.C வகுப்பு வரை இங்கு ஏட்டுக்கல்விக்காக மட்டும் அனுப்பப்படவில்லை. பெண்கள் கலாசார நடைமுறைப் பாவனைப் பழக்க வழக்க வாழ்க்கை முறைகளைக் கற்பதற்காகவுமேயாம்.
- பட்டப்படிப்பு: சென்னைப் பல்கலைக்கழகத்தோடு இணைந்த திருச்சி ஹோலிகுறொஸ் கல்லூரி 1952 – 1956. சென்னைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாதல்.

1. **ஆசிரிய சேவையும், கல்விசார் பிறவும்:**

அரச உதவிகள் கொடை பெற்றுச் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்பட்டு வந்த திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 1957 தொடக்கம் ஆசிரியர்பணி ஆரம்பம்.

2. 1960 டிசம்பரில் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதன் பொருட்டு. கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு மாற்றம்.

3. கோப்பாயில் இருந்து அழுத்கம முஸ்லிம் மகளிர் பயிற்சிக் கல்லூரிக்கு மாற்றம்.
4. கல்வித் திணைக்கள பாடநூல் மொழி பெயர்ப்புக் குழுவிற்கு மாற்றம்.

5. இங்கிருந்து திரும்ப கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு மாற்றப்படல் இக்காலத்தில்

1. பட்டப்பின் படிப்புப் பயிற்சியில் தேர்ச்சி

1. (Diploma) in Education
2. பட்டப்படிப்புப் பயிற்சி இந்து நாகரிகம் தேர்ச்சி.
3. உப அதிபர் நியமனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இங்கிருந்து இராமநாதன் கல்லூரி அதிபராக இருந்த காலத்தில் தமது 60 ஆவது அகவையில் ஆசிரிய சேவையில் இருந்து 14-09-1992 இல் ஓய்வு பெற்றார். தான் எவ்வாறு கல்வியில் முன்னேறி வந்தாரோ, அதேபோன்று தன்மாணவர்களும் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்துடன் பாடுபட்டுக் கற்பித்துப் நற்புத்திபுகட்டி வந்த ஓர் உத்தம ஆசிரியர் இவராவார்.

இவர் அதிபராக இருந்து ஓய்வு பெறும் நாட்களை ஓட்டி சிவஞானி **இராமநாதன்** அவர்களின் சமாதிக் கருங்கற்கோயிலாகிய இராமநாதீஸ்வரத்தின் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்து மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அந்நாள் பரமேஸ்வரா நம்பிக்கை நிதியப்பொறுப்பாளராக இருந்த திரு. பத்மநாதன் விருப்பப்படி செயற்பட்ட கைங்கரியம் இதுவாகும்.

**பொதுப்பணிகள்:**

1. மயிலணி முருகமூர்த்தி கோயில் அறங்காவலர் சபைத் தலைவர்.

2. இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவர் **"சைவ மங்கையர் சபை" செயலாளர்,** இச்சபை முன்னாள் கல்விப்பணிப்பாளர் திருமதி இரத்தினா நவரத்தினம் அம்மையாரினால் தொடக்கி வைக்கப்பட்ட சபையாகும். இதுவே **சீமாட்டி லீலா இராமநாதன்** நினைவு நாளில் ஆண்டுதோறும் பல்கலைக்கழகத்தில் தக்கோரை வரவழைத்து நினைவுச் சொற்பொழிவு செய்வித்து வருகின்றது.

3. பரமேசுவரா அறக்கொடை நிதியத்தின் இயக்குனர் சபை உறுப்பினர்.

4. யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்.

4. யாழ். இந்துப் பேரவைப் பிரதித் தலைவர்.

குறிப்பு: இந்நான்கும் மிக்க பொறுப்பானதாபனங்கள்

5. துர்க்காபுரம் மகளிர் இல்லத்தோடு முன்னர் தொடர்பு பட்டுப் பணியாற்றியுள்ளார்.

## திருத்தலயாத்திரை

1. குடும்பத்தோடு தென் இந்திய யாத்திரை 1942. 1943



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. காசி யாத்திரை குடும்பத்தோடு. 1966

3. தெ. இ. யா. 1970, 1996, 1997

## சொற்பொழிவு

1. சைவ சித்தாந்த மாநாடு 1970 இல் சேலத்தில் இராஜாஜி மண்டபத்தில் நடந்த பெண்கள் மாநாட்டில் திருமதி இரத்தினா நவரத்தினம் தலைமையில்.

2. திருமுறை மாநாடு 1996 இல் திருவல்லிக் கேணியில் திரு. இரத்தின சபாபதி தலைமையில்.

3. தெ. இ. யாத்திரையின் போது 1997 இல்

    1. சிதம்பரம் நாவலர் பாடசாலையில் நாவலர் பெருமான் பற்றி.

    2. 1997 இல் திருப்போரூர் மடாதிபதி தரிசனம் செல்லும் இடமெல்லாம் யாழ்ப்பாணம் குமாரசுவாமிப் புலவர் பேத்தி என்று பெரு மதிப்பு மரியாதைகள்.

அடிக்கடி எங்கள் நாட்டில் நடைபெறும் நிகழ்வுகளில், சொற் பொழிவுக் கென்றும், ஆசியுரைக் கென்றும், மங்கல விளக்கேற்றலுக்கென்றும் அழைப்புக்கள் வந்து கொண்டே இருக்கும்.

ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கு அழைப்புக்கள் வந்ததுண்டு. நலக் குறைவான கணவரைவிட்டுப் பிரிய மில்லாததனால் அவற்றை விலக்கிக் கொண்டார்.

## குடும்பம்: பதினொரு தலைமுறையாகக் கல்விப் பாரம்பரியத்தில் வளர்ந்து வந்த குடும்பம்

| | | |
|---|---|---|
| தந்தை | : | குமாரசுவாமிப்புலவர் |
| தாய் | : | சின்னாச்சியம்மை |
| மகன் | : | முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B.A |
| திருமணம் | : | சட்டத்தரணி மகள் கமலாம்பிகை அம்மையார் 04-12-1931 |

பிள்ளைகள் :

1) மங்கையர்க்கரசி B.A ஆசிரியர்
க. திருச்சிற்றம்பலம் – சங்கானை
அரச ஓய்வூதியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சிவசோதி வே. துரைசிங்கம்
அரச வருமான வரி அலுவலர் – கொல்லங்கலட்டி

மகன்: வாகீசன்

3. குமாரசுவாமி தேசி கடதாசிக் கூட்டுத்தாபனத்திலிருந்து ஓய்வு பெற்றவர்.

பரமேஸ்வரி – கோப்பாய்

பிள்ளைகள் : ஜமுனா, ஜானகி – உடுப்பிட்டி

சந்திரசேகரன் + இராஜேஸ்வரி – முதலி வளவு

பிள்ளைகள்: குமரேசன் – குமாரசூரியர்

எங்கள் கண்ணுக்கு எட்டியளவில் பதினொரு தலைமுறையாகத் தமிழுக்கும், சைவத்திற்கும், சமூகத்திற்கும் இடையீடின்றி பெரும்பணி ஆற்றி வந்த புகழ்பூத்த பெருமைக்குரிய வழித்தோன்றல் வழி வந்தவர் மங்கையர்க்கரசியார் புன்னகை பூத்த புன் சிரிப்புடன் பம்பரம் போற் சுழன்று பல நற் பணிகளை ஆற்றி வந்தவர் இவர். வள்ளுவர் வாசுகிபோல் மனமொத்த வாழ்வு வாழ்ந்து வந்த இத் தம்பதியரில், கணவனுக்கேற்பட்ட நலக்குறைவை வேண்டியாங்கு நிறைவாகப் பராபரித்ததோடு இவ்வளவு பொதுச் சுமைகளையும், நிறைவாகச் செய்து வந்தாரென்றால், தெய்வீக சத்திதான் அவரைக் கொண்டு நடத்தியிருக்க வேண்டுமென எண்ண வைக்கின்றது. திடீரென ஏற்பட்ட உடற் சோகை படிப்படியாக சுகம் பெறுமென எல்லோரும் நினைந்தனர். அது படிப்படியா ஏற்றம் பெற்று ஆளையே இறக்கி விட்டது. 22-05-2006 இல். வீட்டுக்கும் நாட்டிற்குமே பேரிழப்பாயது. எதிலும் எக்காரியத்திலும் இவர் செம்மையுள் நின்றவர். "செம்மையுள் நிற்பவர்க்குச் சிவகதி விளையுமன்றே என்று" தானே அப்பர் பெருமானும் கூறுகின்றார். அந்தளவில் அவர் ஆத்மா பேரின்ப வெள்ளத்திழைக்கப் பிரார்த்திப்போமாக.

அவரது தீக்கடன் – நீர்க்கடன் – ஆத்மசாந்திக் கிரியைகள் அவ்வக் காலத்தில் நடந்தேறின. ஆயின் அவர் பெயர் நிலை நிற்க மலர் ஒன்று கருவூலம் என்னும் பெயரில் வீட்டுக்கிருத்திய நாளாகிய இன்று (11-06-2006) வெளியிடப்படுகின்றது. அது மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாவது தோத்திரக் கொத்து. இரண்டாவது அவரின் அபிமானிகள் அவர் பற்றிய எழுதிய விடயதானம். மூன்றாவது காலத்திற்குக் கால அன்னாரினால் எழுதப்பட்ட கட்டுரைகள். வீட்டு ஈமக்கிரியைகள் நடந்தபோது அம்மையாரின் அருங்குணாதியங்கள் – ஆற்றல் திறமை துணிவு – சாதுரியத்தன்மை பற்றி அழுதழுது. பேசினார்களே. அன்று அவற்றைக் கேட்காதோர் இக்கருவூலத்தைப் படித்துத் தெளியும் படி வேண்டுகின்றோம்.

சாந்தி சாந்தி சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ பாரம்பரியங்களைப் பேணிய பெருமைக்குரிய மங்கை

சைவ பாரம்பரியங்களைப் போற்றிப் பாதுகாத்த பெருமைக்குரிய மாதரசி திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆனார்.

எமது மண்ணில் மகத்தான பணிகள் ஆற்றிவந்த மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்களின் பிரிவுச் செய்தியறிந்து மிகுந்த கவலையடைகின்றோம். சைவசமயப் பாரம்பரியங்களைப் போற்றிப் பாதுகாப்பதில் முன்னின்று தொண்டாற்றிய பெண்மணி. பல்கலைக்கழகப் பேரவை முதல் பல நிறுவனங்களில்பணியாற்றிய அம்மையார் சொல்வன்மைமிக்க சிறந்த பேச்சாளர். சைவ சமய மாநாடுகள், விழாக்களில் முதன்மைப் பங்கு வகித்த அம்மையாரை சைவ உலகம் இன்று இழந்துவிட்டது.

அம்மையார் ஆன்மா பிறவா இறவாப் பேரின்பப் பெருவாழ்வு பெறப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த**

பரமாச்சார்ய சுவாமிகள்

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம்.



**இராமநாதன் மாணவியரின் அணிவகுப்புடன் அமரரின் இறுதி ஊர்வலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையர்க்குத் தனியரசி

சேர். பொன். இராமநாத வள்ளலினதும் சீமாட்டி லீலாவதி இராமநாதனினதும் வழி நின்று சைவத்தமிழ் வளர்ச்சிக்கு நற்பணியாற்றிவந்த திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அம்மையார் அவர்களது திடீர் மறைவு யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்திற்கு இலகுவில் ஈடுசெய்ய முடியாதவொரு பேரிழப்பாகும்.

மறைந்த அம்மையாரைக் காணும் போதெல்லாம் "மங்கையர்க்குத் தனியரசி" என்ற சேக்கிழார் பெருமானின் திருவாக்கும் பொய்யாமொழிப்புலவரின் மனையாள் வாசுகி அம்மையார் பற்றிய கதைகளும் எனக்கு நினைவுக்கு வரும். சைவசமய சேவையில் சேக்கிழார் சித்தரிக்கும் மங்கையர்க்கரசியாகவும், உடல்நலம் குன்றிய தமது கணவருக்குச் சேவை செய்யும் போது சிறுவயதிலிருந்தே மனக்காட்சியில் பதிந்த வாசுகியம்மையாராகவும் காட்சியளிப்பார்.

சுன்னாகம் குமாரசாமிப்புலவரின் பேர்த்தியாக மழவிடையார்க்கு வழிவழி மணஞ்செய் குடிப்பிறந்ததால் இயற்கையாகவே அமைந்த சைவத்தமிழ் மரபு பேணும் பண்பும் இராமநாதன் கல்லூரி மாணவியாகவிருந்து சீமாட்டி லீலாவதி இராமநாதனின் வழிகாட்டலின் கீழ் பெற்ற பயிற்சியும் இணைந்த ஒரு பண்பாட்டின் வடிவமாக அம்மையார் விளங்கினார்.

எப்பொருள் பற்றிப் பேசினாலும் சேர். பொன். இராமநாதனினதும் சீமாட்டி இராமநாதனினதும் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களை எடுத்துக் கூறத்தவறமாட்டார். இவர்கள் இருவர் மீதும் அம்மையார் கொண்டிருந்த பற்று மகத்தானது. பல சைவ மாநாடுகளிலும் சமய விழாக்களிலும் பங்குபற்றிச் சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றியுள்ள அம்மையார் சமய சஞ்சிகைகளில் தரமான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ஆலய நிர்வாகசபைத் தலைவராக, கல்லூரி அதிபராக, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராக, சைவ மங்கையர். கழகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவியாக. சேர். பொன். இராமநாதன் நம்பிக்கைச் சொத்துக்கள் முகாமைத்துவ சபையின் தலைவியாக இவர் ஆடம்பரமின்றி அமைதியான முறையில் ஆற்றிய பணிகள் பல.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராக பல ஆண்டுகள் பணியாற்றிய அம்மையார் பேரவைக்கு பல்கலைக்கழகத்திற்கு வெளியேறியிருந்து நியமிக்கப்பட்ட முதற்பெண்மணி என்ற கௌரவத்தையும் பெறுகிறார். பேரவையில் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகம், சித்தமருத்துவத்துறை ஆகியவற்றின் அபிவிருத்தி பற்றிய விடயங்களில் அதிக ஈடுபாடு காட்டி வந்தார். இராமநாதன் நுண்கலைக் கல்லூரியின் நிர்வாகத்தை மேம்படுத்தப் பேரவையால் எனது தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்தவராக அம்மையார் பணியாற்றிய போது அவருடன் அதிக நேரம் அளவளாவவும் நீதி வழுவா நெறிமுறையில் பிரச்சினைகளை அணுகும் அவரது பண்பை அறிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது.

அம்மையாரின் திடீர் மறைவு பல்கலைக்கழகத்துக்கு சமீபத்தில் ஏற்பட்ட பேரிழப்புகளுள் ஒன்று. அம்மையாரின் ஆன்மா பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானது திருவடிகளில் நித்திய ஆனந்தம் பெறப் பிரார்த்திப்போமாக.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
2006 யூன் 06 ஆம் நாள்.

பேராசிரியர் **இ. குமாரவடிவேல்**
பதில் துணைவேந்தரும்
விஞ்ஞான பீடாதிபதியும்.



**மறைந்த அன்னைக்கு அஞ்சலி செய்கின்றனர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு விழுமியங்களைக் கைக்கொண்டவர்

ஸ்ரீமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்களின் மறைவு சைவ, தமிழ் மக்களிற்கு மிக்க கவலை தரும் நிகழ்வாக அமைந்து விட்டது. இவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சைவத்திற்கும், தமிழிற்கும், கல்விக்கும் பணிகள் பல புரிந்திருக்கலாம் என்பதே எமது கவலை.

இவர் சைவ – தமிழ் பண்பாட்டு விழுமியங்களை உள்வாங்கி, காட்சியிலும், கருத்திலும், செயலிலும் அவ்வாறே விளங்கினார். இவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும், துணை அதிபராகவும், பாடசாலை ஆசிரியராகவும், அதிபராகவும் சிறந்த கல்விப்பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பேரவை உறுப்பினராகக் கடமையாற்றியுள்ளார். நான் துணைவேந்தராக இருந்த காலப்பகுதியில் பேரவை உறுப்பினராக அவர் ஆற்றிய பணி சிறப்புமிக்கது. பேரவையில் ஒரு கட்டத்தில் தனியொரு பெண் உறுப்பினராக விளங்கி, பெண்கள் சார்ந்த விடயங்கள் பலவற்றில் ஆக்கபூர்வமான கருத்துக்களையும், தீர்வுகளையும் முன்வைக்கத் தவறுவதில்லை. இராமநாதன் நுண்கலைத்துறையின் வளர்ச்சியில், நாம் மேற்கொண்ட செயற்பாடுகள் யாவற்றிற்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக்களிலும், அதன் பின் நிகழும் திருவாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை நிகழ்வுகளிலும் இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் சார்பாக நன்றியுரை வழங்கும் பணியைச் சிறப்பாகச் செய்து வந்தார். இவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் பணிகளை நன்றியுடன் நினைவு கூர்ந்து, அவற்றைச் சிறப்பாக முன்னெடுத்த பெருமைக்குரியவராவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப் போமாக.

பேராசிரியர்
**பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**மூத்த புவியியல் பேராசிரியரும் முன்னாள் துணைவேந்தரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தாம் கூறும் இலட்சியங்களை வாழ்ந்து காட்டியவர்"

அண்மையில் அமரராகிய திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் சைவத்தமிழ் உலகிற்குக் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ் சமூகத்திற்கு நன்கு குறிப்பிடத்தக்க நற்பணிகள் ஆற்றியுள்ளார். அவருடைய மறைவினால் ஏற்பட்ட பேரிழப்பு எளிதில் ஈடுசெய்ய முடியாததாகும். புகழ்பெற்ற சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் வழித்தோன்றலாகிய இவ்வம்மையார் வளம் மிக்க தமிழ், சைவ மரபுகளை முது சொத்தாகவே பெற்றுள்ளார். இவற்றைப்பேணி மேன்மேலும் வளர்த்து வந்துள்ளார். இம்மரபுகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகவும் இலங்கியுள்ளார்.

பல சமய, கல்வி நிறுவனங்களின் தலைவராகவோ, செயற்குழு உறுப்பினராகவோ இவர் நற்பணி புரிந்துள்ளார். எடுத்துக்காட்டுகளாக இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவர்களின் அமைப்பான சைவமங்கையர் கழகத்தலைவராகவும், பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபைத்தலைவராகவும், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களில் ஒருவராகவும் இவர் விளங்கியமையைக் குறிப்பிடலாம். இவற்றைவிடச் சில சமய, பண்பாட்டு நிறுவனங்களின் ஆலோசகராகவும் இவர் செயற்பட்டார்.

இவர் தமிழ், ஆங்கிலம், சைவசமயம், சைவ சித்தாந்தமாகியன வற்றிலே சிறந்த புலமை பெற்றிருந்தார். பல சமய, பண்பாட்டு நிறுவனங்களில் இவரின் அர்த்த புஷ்டியுள்ள சிறந்த சமயப் பேச்சுக்கள் அவ்வப்போது இடம் பெற்றுவந்தன. யாழ்ப்பாணத்திலுள்ள சிறந்த தமிழ்ப் பேச்சாளர்களில் இவ்வம்மையாரும் ஒருவராவர். பேச்சுத்திறன் மட்டுமன்றி எளிமையும், இனிய சுபாவமும் உடையவர், இதனால் பலருடைய நன்மதிப்பினையும் பாராட்டுக்களையும் பெற்றிருந்தார். தாம் கூறும் இலட்சியங்களை வாழ்ந்து காட்டியவர் இவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய வாழ்க்கைத்துணைவராகிய திரு. திருச்சிற்றம்பலம் அவர்கள் சிறந்த சமூக சேவையாளர். ஆளுமையுடையவர். யாழ்ப்பாணத்திலே இன்று வெளிவரும் உதயன் நாளிதழ் தோன்றுவதற்கு மூலகாரணமாக விளங்கியவர். இப் பெயர்ப்பட்டவரின் வாழ்க்கைத் துணைவியாக அம்மையார் தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" எனும் திருவள்ளுவரின் திருவாக்கிற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கினார். இருவரும் பரஸ்பரம் புரிந்துணர்வு கொண்டவர்களாக ஒருவரின் செயற்பாடுகளுக்கு மற்றவர் உறுதுணையாக விளங்கினர்.

தன்னுடைய இறுதிக் காலம்வரை குறிப்பாகச் சைவப்பணிகளி லீடுபட்டுவந்த இவரின் செயற்பாடுகளைப் பலர் பாராட்டியுள்ளனர். குறிப்பிடத்தக்க சைவத்தமிழ்ப் பணிகளை பல ஆண்டுகள் செய்து வந்த இவ்வம்மையாரின் ஆத்மா திருவடிப்பேறுபெறவும், இவரின் மீளாப் பிரிவினால் நன்கு கவலையுற்றிருக்கும் அருமைக் கணவரும், உறவினரும், நண்பர்களும், மாணவர்களும் இப்பெரும் இழப்பினைத் தாங்கவல்ல ஆற்றல் பெறவும் எல்லாம்வல்ல ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமான் திருவருள்பாலிப்பாராக. இவ் அம்மையார் பின்பற்றிய இலட்சியங்களைப் பின்பற்றுதலே ஒருவர் இவருக்குச் செய்யக் கூடிய கைம்மாறாகும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஓய்வு பெற்ற சமஸ்கிருதப்
பேராசிரியர்
**வி. சிவசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரவையின் முதற் பெண்ணரசி

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்களை நாங்கள் சிலர் " பாண்டிமாதேவி" என்று தான் பேசிக்கொள்வோம்.

"மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்"

தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை, என்னும் சேக்கிழாருடைய பாடல் அவரைக் காணும் போதெல்லாம் நினைவுக்கு வரும்.

அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினராக வந்தபொழுது அப்பேரவை உறுப்பினராக நானும் இருந்தேன். அவர் பல்கலைக்கழகச் சபா மண்டபத்தினுள்ளே நுழைந்தபோது ஓர் உண்மை; வரலாற்றுண்மை நினைவிலே வந்தது. பல்கலைக் கழகப் பேரவையிலே பேராசிரியை வசந்தி அரசரட்ணம் போன்ற பெண்கள் உறுப்பினர்களாக இருந்தனர். இவர்கள் யாவரும் பல்கலைக்கழகப் பொறுப்பாள்கை காரணமாக பதவி வழி உறுப்பினர்களாகவே இருந்தனர். பல்கலைக் கழகத்துக்கு வெளியிலிருந்து பேரவைக்கு முதன் முதலாக நியமிக்கப்பட்ட பெண் உறுப்பினர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலமே ஆவார்.

இலங்கையிலுள்ள இந்து நிறுவனங்களுள் பெரும்பாலானவற்றுக்கு ஆண்களே தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பரமேஸ்வரா அறநிதியச்சபையின் தலைவராகத் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அதிலும் ஒரு சாதனை செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடைய சமயப் பொருளைப் பல கோயில்களிலும், பள்ளிகளிலும், பல மேடைகளிலும் பேசக்கூடிய பெண்கள் மிகச் சிலரே உளர். அத்தகைய பெண் பேச்சாளர்களுள் ஒருவராகத் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் விளங்கியுள்ளார். எடுத்துக் கொண்ட பொருளை சுவையாக, தக்க எடுத்துக்காட்டுகளுடன் பேசுகின்ற அவர் தனக்கென ஒரு பேச்சு நடையினைக் கொண்டிருந்தார். திருமதி லீலாவதி இராமநாதன் சீமாட்டியுடன் வாழ்கின்ற வாய்ப்புப் பெற்றவர். அவர்களைப் பற்றிய கதைகளைத் தன்னுடைய பேச்சுக்களில் இடையிடையே கூறிச் சுவையூட்டுவார்.

பல்கலைக்கழகத்தில் ஒவ்வோராண்டும் லீலாவதி அம்மையார் நினைவுச் சொற்பொழிவு நடைபெறுவதுண்டு. அப்பொழுதெல்லாம் அச்சொற்பொழிவுக்கான அறக்கட்டளை நிதியத் தலைவியாக, நினைவுச் சொற்பொழிவாற்றியவர்க்கும், நிகழ்ச்சிக்கு வந்தவர்க்கும் நன்றியுரை கூறுவார். இவ்வாண்டு பட்டமளிப்பின் பின்னர் நடைபெறவுள்ள அந்த நிகழ்ச்சியிலே அம்மையாரைக் காணமுடியாதென்பது நெஞ்சை நெகிழ்விக்கிறது.

அம்மையாருடைய செயற்பாடுகளையெல்லாம் பார்க்கும் போது இவருடைய கணவன் பின்னணியிலிருந்து எவ்வளவு ஊக்கத்தினை வழங்குகிறார் என்பதை உணரக்கூடியதாயிருந்தது. திருமதி மங்கையர்க்கரசி அவர்கள் ஆசிரியையாக, அதிபராக, விரிவுரையாளராக, சிறந்த சொற்பொழிவாளராக இருந்தமைக்கு அவர் பெற்ற கல்வியுடன் அவருடைய பேரனார் புகழ்பூத்த சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் வழிவந்த புலமை மரபும் ஒருவழியில் உதவியது என்றும் கூறலாம்.

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் கல்விப் பெருமையால் மற்றவர்க்குத் தலைவணங்கா ஓர் அறிவுத் தன்மை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியறிவினாலே வந்த நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் அப்பெரும் புலவரின் வாரிசு திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலத் திடமும் இருந்ததையிட்டு வியப்படையத் தேவையில்லை. லீலாவதி அம்மையாரை எடுத்துக் காட்டாக வைத்து அவர் பெண்கள் பற்றிக் கூறும் சில கருத்துக்களுக்கு அவரே எடுத்துக் காட்டாகவும் அமையலாம்.

ஆங்கிலமொழியிலும் தமிழ் மொழியிலும் நன்கு பேசவல்ல அம்மையாரின் பிரிவையிட்டு வருத்தமடையும் அவர் கணவன் மற்றும் உற்றார், உறவினருக்கு நாம் ஆறுதல் கூறுகிறோம். அம்மையாரின் இனிய ஆன்மா சிவகாமி உடனுறை ஆடல்வல்லானின் தாமரைத் தாளிலே இன்புற்றிருக்க இறையருளை வேண்டுகிறோம்.

பேராசிரியர்
**அ. சண்முகதாஸ்**

## திருக்கோயில்

பசுவின் உடம்பு முழுவதும் பால் பரந்து இருப்பினும் கொம்பைப் பற்றி இழுத்தால் பால் வருமா? வாலைப் பற்றி வருடினால் பால் கிடைக்குமா? கிடையாது. மடியில்கை வைத்தால் தான் கிடைக்கும். அதுபோல் இறைவன் கருணை எங்கும் நிறைந்திருந்தாலும் திருக்கோயில் பசுவின் மடிபோன்றது ஆகும். யந்திரத்துடன் கூடியதும் முன்னோர்கள் வழிபட்டதுமாகிய ஆலயத்தில் உள்ள மூர்த்தியை என்புருக அன்புடன் வழிபட்டால் இறைவனுடைய அருள் கிடைக்கும்.

*- கிருபானந்த வாரியார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறவா நினைவிலிருக்கும் மங்கை

அம்மா அவர்கள் 22-05-2006 இல் இறைவனடி சேர்ந்த செய்தி யாவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. நாமறியப் பதினொரு தலைமுறையாகப் புகழ்பூத்த குடும்பத்தில் உதித்து இறக்கும் வரை புகழொடு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். இல்லறம் என்னும் நல்லறத்தைப் பற்றி நின்றதோடு, தமது கணவரின் இன்பத்திலும் துன்பத்திலும் தளராது தம்மை அர்ப்பணித்தவர். இதற்கெல்லாம் மூலவேர் அவரது குடும்பப் பின்னணியாகும். நாவலர் வழிநின்று சைவத்தமிழ்ப்பணி செய்தவர் இவரது பேரனார் குமாரசுவாமிப்புலவர் அவர்கள். இவர் கைப்பிடித்த கணவன் கண்ணியமானவர் மட்டுமன்றிச் சமய, சமூகப்பணிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட கனவானும் ஆவார். இத்தகைய பின்புலத்தைக் கொண்ட இவர் பொதுப் பணிகளில் ஈடுபட்டமை புதிரன்று.

இந்து சமயப் பேரவையில் இணைந்து நமது நிறுவனத்தின் உபதலைவர்களில் ஒருவராகச் செயலாற்றியவர். இராமநாதனின் நினைவைத்தாங்கி நிற்கும் பரமேஸ்வராக்கல்லூரி இயக்குனர் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்று, சேர். பொன். இராமநாதன் அவர்களின் இலட்சியங்களை முன்னெடுக்க அரும்பாடு பட்டவர். சேர். பொன். இராமநாதன், சீமாட்டி லீலாவதி அம்மையார் ஆகியோர் மீது அளவு கடந்த பக்தியுடையவர். சுருங்கக் கூறின், சேர். பொன். இராமநாதன் அவர்களின் கனவாகி வாழ்ந்து, இலட்சியச் சைவத்தமிழ்ப் பெண்ணாக வளர்ந்து, இறைவனடி சேரும் வரை இவ்விலட்சியத்தைப் பற்றி நின்றதால் மறைந்தும் மறவாப் புகழுடம்புடன் இன்றும் நம் மத்தியில் வாழ்கின்றார். அவர் ஆசி மானசீகமாக என்றென்றும் எமக்குண்டு.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

பேராசிரியர்
**சி. க. சிற்றம்பலம்**
தலைவர், பரமேஸ்வராக்கல்லூரி இயக்குனர்சபை,
தலைவர், இந்து சமயப் பேரவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தன்மை மிக்க பெருமாட்டி

**தி**ருவாட்டி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலத்தின் திடீர் மறைவு எனக்கும் என் குடும்பத்தினருக்கும் என்னுடைய நிறுவனத்துக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதோடு எம்மைப் பெரும் துயரிலும் ஆழ்த்தியிருக்கிறது.

"தோன்றில் புகழொடு தோன்றுக – அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்று வள்ளுவப் பெருந்தகை விள்ளிய கருத்துக் கேற்ப நுண்மாண் நுழைபுலம் மிக்க புலவர் குடும்பத்தில் புகழொடு தோன்றி, மாசறக்கற்று,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல்
அனைத்துக் கண் ஆகில நீர பிற"

என்ற வள்ளுவரின் வான் மறைக்கு இலக்கணமாகியவர் எங்கள் நெஞ்சில் என்றும் நிறைந்து நிழலாடும் திருவாட்டி மங்கையர்க்கரசியவர்கள். சைவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடும், பக்தியும், நிகரற்ற புலமையும் அவர் பல்துறையிலும் ஈட்டிய பேரறிவுக்கு மேலும் அரண் சேர்ந்து விளங்கின. ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராகப் பணியாற்றி மாணவர் உள்ளங்களில் நீங்கா இடம் பிடித்த அவர், இராமநாதன் கல்லூரி அதிபராகவும் பணியாற்றி, வடபகுதி மாணவர்களின் கல்வி ஈடேற்றத்துக்குப் பெரும் தொண்டாற்றியவர். யாழ். பல்கலைக் கழகத்தில் பேரவையின் (Council Member) உறுப்பினராகப் பணியாற்றிய போது தனது விழுமிய கருத்துக்களை, எப்பக்கமும் கோடாது, தனக்கே உரிய தனித்துவத்தோடும், நடுநிலையோடும், செழுமையான மொழியில் உரைத்து எல்லோருடைய உள்ளங்களையும் கவர்ந்ததோடு, எவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்படுத்தாத தனது பெருந்தன்மையால் பல சிக்கல்களின் சுமுகமான தீர்வுக்கும் வழிசமைத்தவர். அவர் நோய்வாய்ப்பட்டு, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது என்னைத் தன்பக்கம் அழைத்து, பல அறிவுரைகளை எனக்குப் புகன்றார். மிகப் பக்குவமாக எதையும் அணுகுகின்ற பண்பும் அவரது மனிதமும் நான் அவர் மீது பெரும் மதிப்பும் அன்பும் என்றும் நிலைத்திடும் வகையில் கொள்ளவைத்தன. மறைந்தும் மறையாது, எங்கள் நெஞ்சத்தில் ஒளிவிளக்காகத் திகழும் எம்பெருமாட்டிக்கு என்னுடைய, என் குடும்பத்தினுடைய, என் நிறுவனத்தினுடைய ஆழ்ந்த அனுதாபங்களை கண்ணீர் மல்கு்கின்ற அஞ்சலிகளைத் துயரம் மீதுர இயம்புகிறேன்.

**ஈ. சரவணபவன்**
**மேலாண்மைப் பணிப்பாளர்,**
**உதயன் நிறுவனம்.**

## மஹா மிருத்யுஞ்ஜய மந்திரம்

*ஓம் த்ரயம்பகம் யஜா மஹே*
*ஸீகந்திம் புஷ்டி வர்த்தனம்*
*உர்வாருகமிவ பந்தனாத்*
*ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்*

**பொருள்:** *நறுமணமிகுந்தவரும் எல்லா ஜீவன்களுக்கும் புஷ்டி அளிப்பவரும் முக் கண்ணனுமான சிவபெருமானைப் பூஜிக்கின்றோம், வெள்ளரி தன் கொடியினின்றும் விடுவிக்கப்படுவது போல் அமரத்துவத்தின் பொருட்டு அன்னவர் நம்மை மரணத்தினின்றும் விடுவிப்பாராக.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிருக்கோர் இலக்கணம்

தந்தைவழி வந்தவுயர் தமிழ்புலவர் மரபு
தான் தழைக்க வந்துதித்த தனிஞானக் கொழுந்து
இந்தவுலகஞ் சிறக்க ஏற்ற நன்மா ணவர்க்கே
இரும் பெரிய கல்விப்பயிர் ஏற்றிப் பெய்த மேகம்
பந்தமிலா வகை சைவ சித்தாந்தம் விளக்கி
பதிபசுபா சம்சொல்லிப் பகர்கைலைப் பானு
சந்ததமும் பாட்டெழுதும் ஏட்டின்பொரு ளாகி
தானிருந்த பாவை திரு மங்கையர்க் கரசி.

தருமமே சார்பான தக்ககொடைக் கையாள்
தவமுடையாள் குணமுடையாள் தனிச்சைவம் போற்றும்
உரிமையுளாள் ஒப்பில்லாள் உலகுய்யு நடையாள்
உண்மை ஞானம் விரவிடுமின் உளக்கோயிற் பாவை
அரிய தமிழ்ப் புலவர்களை அறிஞர்களை உயர்ந்த
ஆற்றல் மிக்க ஞானிகளைச் சுற்றமாகக் கொண்ட
பெருமை மிக்காள் திருச்சிற்றம் பலத்தின் வாழ்க்கைத் துணையாய்ச்
சிறப்புடனே வாழ்ந்திருந்தாள் செங்கமலப் பூவை.

கணவனையே கண்கண்ட தெய்வமாய்க் கொண்டே
காலமெல்லாம் அவர்க்குணவு தானூட்டி யுண்பாள்
குணமகனா மவரென்றும் வாடாமல் உலகில்
கோயிலெல்லாம் கையேந்திக் கும்பிட்டு நின்றாள்
துணைவனவர் பணியெல்லாம் செவ்வனே செய்து
தீராத நோயினால் திருமங்கையர்க்கரசி
இணையில்லா முருகனடி யெய்திச் சாந்தியுற்றாள்
இவ்வுலகில் மங்கையர்க்கோ ரிலக்கணமாய்த் திகழ்ந்தே.

இணுவில் ஆசிரியர்,
அளவைவாசர்
கொக்குவில்.

முதுபெரும்புலவர்
கலாபூஷணம்,
**வை. க. சிற்றம்பலவனார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ் இனிது மங்கை

பெருமைமிகு இராமநாதன் கல்லூரி வளாகத்தில் பூத்துச் சொரியும் சின்னஞ்சிறு மகிழ மலர் பேசிய மௌனமொழி அது பரப்பும் இனிய மென் சுகந்தம். 19ம் நூற்றாண்டின் முதுபெரும் புலவர் திரு. குமாரசுவாமிப்பிள்ளை அவர் தம் கற்றார் பரம்பரையின் பெருமை தரு செல்வி, மங்கையற்கு தனி அரசி, மங்கை என அன்னியோன்னிய அன்புடன் அழைக்கப்பட்ட, எம் நீண்ட காலநட்பை பயனுறு இனிமை, செய்த அம்மையார் **மங்கையர்க்கரசி** பேசிய மௌனமொழி, ஒரு பாரம்பரியத்திற்கு இலக்கணமாய் அமைந்த அவர்தம் வாழ்க்கையே தான்.

நற்குடிப்பிறப்பு, கல்வி மேம்பாடு, பேச்சுத்திறன், நாவிற்தவழும் எம் இனிய பைந்தமிழ், சிரித்த முகம், கனிவான வார்த்தைகள், அதிபர் பதவி, ஆசிரிய பயிற்சிக்கல்லூரி விரிவுரையாளர், பல்கலைக்கழக செனற்சபை ஒரேயொரு பெண் உறுப்பினர், கடமை தவறாத மனைவி இதில் எந்த நிலையை எடுத்து நோக்கிலும் தனிக் கட்டுரையாய் வளரும் தனித்துவம் இவர் ஆழுமையின் பளிச்சிடும் பெருமை.

இராமநாதன் கல்லூரியில் படித்து, பின் அதன் திறன்மிகு அதிபராய் சில ஆண்டுகள் அதனை நிர்வகித்து, சைவமங்கையர் சபைக் (லேடி இராமநாதன் முன்னின்று ஸ்தாபித்த சபை) காரியதரிசியாய், பழைய மாணவர் சங்கத் தலைவியாய், இவர் கல்லூரிக்கு ஆற்றிய சேவைகள் பல. பல நிலைகளில் இவருடன் இணைந்து நடந்ததால் மங்கை எவ்வளவு ஆழமாகத் தன் கல்லூரியை நேசித்தார் என்பதை என்னால் உணர முடிந்தது. சைவ மங்கையர் சபைத் தலைவியாய் நீண்ட நாட்கள் பணியாற்றிய திருமதி இரத்தினா நவரட்ணம் (இளைப்பாறிய கல்வி அதிகாரி) லேடி லீலாவதி இராமநாதன் அம்மையார் நினைவாக ஒரு அறக்கட்டளை யாழ். பல்கலைக்கழகத்தில் நிறுவுவது பழைய மாணவர் கடமையெனக் கொண்டு எடுத்த முயற்சியில் கை கொடுத்தவர் மங்கை. இன்று வருடா வருடம் லேடி இராமநாதன் அம்மையார் நினைவு நாள் பல்கலைக்கழகத்தில் சிறந்த பேச்சாளர்கள் பங்கு பற்றி நன்றாக நடைபெறுவது மங்கையின் வாழ்வில் ஒரு திருப்தி தரும் நிகழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரும் அறிந்து போற்றுவது மங்கையின் புற வெற்றிகளை. ஆனால் என் கணவரையும் என்னையும் மிகவும் வியந்து இவரைப் போற்ற வைப்பது இவர் அகப்பண்பாடு. பக்கவாதத்தால் துயருறும் தன் கணவரை 15 வருடங்கட்கு மேலாக கண்ணுக்குள் வைத்து இமை போல் காத்த இவர் தனிக்கருணை தாய்மையின் மேலான உளப்பண்பாடு. இவர் கணவரோ மனிதருள் ஒரு மாணிக்கம். தனக்கு ஏற்பட்ட வேண்டாத வினையைப் புன்சிரிப்புடன் ஏற்று மனைவி வருந்தக்கூடாதெனத் தன் வருத்தத்தையும் மறைத்து இயல்பாக வாழ்ந்தார். சென்னைக்கு ஆயுர்வேத மருத்து வத்திற்கு இவரை அழைத்து வந்த மங்கை அப்பொழுது அங்கு இருந்த எம்மையும் வந்து பார்க்கத் தவறவில்லை. கைத்தாங்கலாகக் கணவரைப் படிகளில் இவர் அழைத்துவந்த சீரைப் பார்த்து வழிவிட்டு ஒதுங்கிய பிராமணப் பெண்கள் கூட இந்தக் காலத்தில் இப்படியொரு தம்பதியினரா என்று அதிசயித்தனர்.

பக்கவாதம் திருச்சிற்றம்பலத்தின் உள்ளத்தை மேலும் புடம் போட்டதே அன்றி அவர் மன உறுதியைச் சிறிதும் தாக்கவில்லை. திருத்தல தரிசனம், கங்காஸ்னானம், அறப்பணிகள், திருக்கோவில்கள் புனரமைத்தல், என இவர்கள் பணித்தொடர் என்றும் இற்றுப்போகவில்லை.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருக்கிறாள் என்பார்கள். மாறாக மங்கையின் வெற்றியின் பின் திருச்சிற்றம்பலத்தைப் பார்க்க முடிகிறது. எல்லா நிலைகளிலும் இவரை ஊக்குவித்து டிப்புளோமாப் (Diploma in Education) பயிற்சிக்கு கொழும்பு செல்ல வழிவகுத்து சிரித்துக் கொண்டே வழி நடாத்தினார். திரு. மங்கையால் நிச்சயமாக இவரை விட்டுச் சென்றிருக்க முடியாது. "எமக்கு வகுக்கப்பட்ட பாதையில் நாம் நடக்கிறோமே அன்றி எம் செயல் என்று எம்மால் எதையும் முடிவு செய்ய முடியாது" என்கிறது கீதை. மங்கை வாழ்வில் இது திருப்பந்தம்.

இறைவன் திருவடியில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சின்னஞ்சிறு மகிழ மலர் **நித்திய நிறைவாய்** மென் சுகந்தம் பரப்பி நிற்கு மென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**சகிதேவி கந்தையா** (B.A., Dip. in. Edu.)
**(கனடா) அமெரிக்க பழைய மாணவர் சங்கச்சார்பில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடு காத்த மங்கையார்

மங்கையர்க்கரசி அம்மையார் இறைபதம் எய்திய செய்தியைப் பத்திரிகை மூலமும், அன்பர்கள் மூலமும் அறிந்தேன். திடீரென அறிந்த இச்செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அன்றிலும் பெடையும் போன்று இணைபிரியாது வாழ்ந்த திருச்சிற்றம்பலம் அவர்களுக்கு இச்செய்தி பேரதிர்ச்சியாக இருக்கும். எனினும் யாது செய்ய முடியும்? விதைத்தவன் அறுத்தால் விலக்கவும் முடியுமா? தூய சைவ வாழ்வை மேற்கொண்டு, எண்ணம், சொல், செயல் யாவற்றிலும் புனிதம்பேணி கணவனைக் கண்கண்ட தெய்வமாகக் கொண்டு அறப்பணியும் சமயப்பணியும் புரிந்து வாழ்ந்த அம்மையாருக்கு வீடு நிச்சயம். இன்னும் தொண்டுகள் புரியும் வாய்ப்பிருந்தும் ஆண்டவன் அவரை அழைத்துவிட்டார்.

அன்னாரின் கணவர் தேறுதல் அடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

1. சிரித்தமுகம் என்றென்றும் சீறியறி யாதமனம்
 செவ்வி நோக்கி
 விரித்திடுநற் பிரசங்கம் வெண்டுகிலாள் கலைவாணி
 என்னும் தோற்றம்
 தரித்திடவே சைவமதை வளர்த்தபுல வர்பேர்த்தி
 தாழ்வி லாத
 பரித்ததமிழ்ப் பண்பாட்டை மங்கையவள் காட்டியதை
 மனுதுட் கொள்வோம்.

2. திருச்சிற்றம் பலம்சொல்லித் தேவாரம் பாடுபவர்
 பக்கம் நின்று
 கருத்தினொடு கணவரது நாமமது என்றெண்ணிக்
 களிப்புக் கொள்வான்
 வருத்தமது எதுவேனும் காட்டாது மண்ணுலகில்
 வாழ்ந்த அம்மை
 நிருத்தனது பதமலர்கள் நண்ணிநிதம் வாழ்ந்திடவே
 வழுத்தி நின்றோம்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

**பண்டிதை பொன். பாக்கியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்மாதிரியான என்னாசிரியை

**சை**வமுந்தமிழுங் காத்த மங்கையர் திலகம், இராமநாதன் கல்லூரி உருவாக்கிய இலட்சியப்பெண், சிறந்த பேராசிரியர், ஆளுமைமிக்க அதிபர், பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை, யா/பல்கலைக்கழக மூதவை உறுப்பினர், சைவமங்கையர் கழக உறுப்பினர், சமாதான நீதவான். தன் குலத்திற்கும், தான் படித்த கல்லூரிக்கும், தன்னூருக்கும், சைவத்தமிழ் உலகிற்கும் பெருமை சே தடித்தந்தவர். பெரியபுராணங்கூறும் பெண்ணடியார் வரிசையில் வைத்தெண்ணத் தகுதி பெற்றவர்.

இத்தகை பெருமைகளுக்கும் காரணமான திருமதி திருச்சிற்றம்பலம் மங்கையர்க்கரசி 22-05-2006ல் தமது எழுபத்துநாலாவது வயதில் இறைநிலை அடைந்தமை எல்லோருடைய உள்ளங்களையும் வேதனையில் ஆழ்த்தியது. எழுபத்து நான்கு வருட எல்லைக்குள் அவரது பணிகள் பலவாக இருந்தன. சைவத்தமிழ் உலகம் அவரை என்றுமே மறவாது. என்னை அன்புக்குரிய மாணவியாக ஏற்றுக்கொண்டு, பயிற்றுவித்து, பணிக்காளாக்கி விட்டவர். எனது ஆக்கங்களையும், பணிகளையும் கண்டு மகிழ்பவர். இவரது தூண்டுதலினால் சேர். பொன். இராமநாதன் குருபூசைத்தினங்களில் கட்டுரைகள் எழுதவாய்ப்புக் கிட்டியது. இராமநாதனிடம் அளவு கடந்த பக்தியும் விசுவாசமும், கல்லூரியின் முன்னேற்றத்தில் கருத்தும் உடையவர். கல்லூரியையோ இராமநாத வள்ளலையோ யாரும் குறைத்துப் பேசுவதைத் தாங்கமாட்டாதவர். அன்பும் பணிவும், அடக்கமும், பொறுமையும் உடையவர். சிறந்த இறைஞானமும், சமய அறிவும் நிரம்பப் பெற்றவர். நீதி தவறாதவர். பழிபாவங்கட்கு அஞ்சுபவர். புகழுக்கு அடிபணியாதவர்.

இத்தகைய மங்கையர்க்கரசியாரிடம் கல்வி கற்கும் வாய்ப்பு 1980ல் எனக்குக் கிடைத்தது. கோப்பாய் பயிற்சிக்கலாசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய மாணவியாக இருந்த எனக்கு, சமயம், கற்பித்தல்முறை, கல்விக்கோட்பாடு கற்பிக்கும் பேராசிரியராக அவர் இருந்தார். அவரது ஆழமான சமய அறிவும், இனிமையான பேச்சும், நடையுடை பாவனை யாவும் என்னுள்ளத்தைக் கவர்ந்தன. என்னை மட்டுமல்ல என்னோடு கற்றவர் உள்ளங்களையும் கவர்ந்ததில் வியப்பில்லை. அவர்கள் வகுப்பிற்குள் காலடி வைத்தால் பூரண அமைதி நிலவும். சித்திரப்பாவை போலாகிவிடுவர் மாணவர்கள். காரணம் அவர் தரும் அறிவுவிருந்தை உண்பதற்கே.. பாடம் முடிந்ததும் அடுத்த நாட்பாடம் எப்பொழுது வருமென்று யாவரும் காத்திருப்பர்.

ஒரு ஆசிரியருக்கு இருக்கவேண்டிய இட்சணங்கள் பொருந்தப் பெற்றவராக நடையால், உடையால், பாவனையால், அறிவால் யாவருக்கும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியவர் திருமதி திருச்சிற்றம்பலம் மங்கையர்க்கரசியாவார். மங்கையருக்கு அரசி என்ற பெயர் அவருக்கே தகும்.

அவரது அன்புக்குப் பாத்திரமான என்னைக் கலாசாலைப் பயிற்சி முடிந்ததும், நீர் இராமநாதன் கல்லூரிக்குச் செல்லும். அதுவே உமக்குப் பொருத்தமான கல்லூரி. அங்கு உமது சேவையை நன்றாகச் செய்யும் என்று ஆசீர்வதித்ததுபோல் வழிகாட்டினார். யானும் ஆவலாக இராமநாதன் கல்லூரியில் சேவையில் இருக்குங் காலத்தில் திருமதி சிற்றம்பலம் அம்மா அவர்கள் 1990 ம் ஆண்டு அதிபராக வந்தார்கள். நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் அவருடைய சேவைக்காலம் இரண்டு வருடங்களே நீண்டன. இரண்டு வருடங்களே ஆனாலும் நீண்ட காலப்பகுதியில் ஒருவர் செய்து முடிக்க வேண்டிய சேவையை இக்குறுகிய காலத்தில் செய்து விட்டார். சைவத்தமிழ்ப் பாரம்பரியம் காக்கும் வகையில் பெண் பிள்ளைகளை உருவாக்க வேண்டுமென்ற சேர். பொன் இராமநாதன் அவர்களின் இலட்சியம் கட்டிக்காக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் சமாதியாலயத்தூண்கள் முறிந்தும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிப்புகள் ஏற்பட்டும், லிங்கம், பாலஸ்தாபனம் பண்ணிவைத்த நிலையில், பூசைகள் நடைபெறவில்லை. இந்தப் பாரிய குறை கல்லூரியின் வளர்ச்சிக்கு தடையானது என்பதை உணர்ந்த அவர், பகீரதப் பிரயத்தனத்தினால் சமாதி ஆலய கும்பாபிஷேகத்தை 14-09-1992ல் நிறைவேற்றி வைத்துவிட்டு ஓய்வு பெற்றார். அன்றைய நாள் மறக்க முடியாத நாளாகும். புதிய அதிபராகத் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் கடமை ஏற்றார். அன்றிலிருந்து இடர்பாடுகளினூடும் கல்லூரி வளர்ச்சி கண்டு வருகின்றது.

மேலும் திருமதி மங்கையர்க்கரசி காலத்தில் கல்லூரியில் சமய குரவர் குருபூசை, திருமுறை விழாக்களின் முக்கியத்துவத்தை உணர்த்தி, என்னையும் இப்பணிகளில் ஈடுபடுத்தி, திருமுறைகள் பேணப்பட்டு விழாக்கள் எடுக்கப்பட்டன. அவர் தொடக்கி வைத்த விழா இராமநாதன் கல்லூரி மட்டுமல்ல கோட்டமட்டத்திலும் அதற்குட்பட்ட பாடசாலைகளிலும் இன்று வரை நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சைவத்திற்கும், தமிழுக்கும் தனது பேச்சு வன்மையாலும் எழுத்து வன்மையாலும் பணி செய்தவர். தான் கற்பிக்கின்ற காலங்களில் ஆயிரமாயிரம் ஆசிரிய மாணவர்களை உருவாக்கி உலகிற்கு அளித்தவர். ஒரு தீபத்தில் இருந்து பல தீபங்கள் ஏற்றலாம். இந்த வகையில் அவரால் உருவாக்கப்பட்ட தீபங்கள் ஆயிரமாயிரமாக உலகமெங்கும் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன.

சேர். பொன். இராமநாதவள்ளலாருடைய கனவை நனவாக்க வேண்டுமென்பதில் உறுதியுடையவராக இருந்தார். நல்ல சைவத்தமிழ்ப் பெண்களை உருவாக்க வேண்டும், அவர்கள் சைவத்திற்கும், தமிழுக்கும் பணியாற்றுவதோடு, சிறந்த இல்லத்தரசிகளாக இருக்க வேண்டுமென்பார். தானே சிறந்த குடும்பத் தலைவியாக இருந்து வாழ்ந்து காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புகழ் புரிந்த இல்லிலோர்க்கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடுநடை"

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய புகழ்புரிந்த இல்லாளாக விளங்கித் தன் கணவருக்கும் பெருமை தேடித்தந்தவர். சுகவீனமுற்றிருந்த கணவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்தும், சமூகத்திற்கு ஆற்றவேண்டிய பணிகளைச் செய்தும் தன் இறுதி மூச்சுவரை பணியாற்றி இறைநிலையடைந்தவர். கணவருக்கு அன்பகலாத மனைவியாக, மாணவருக்கு அன்பு குறையாத நல்லாசானாகச், சைவத்தமிழ் உலகிற்கு வழிகாட்டியான இவரை மனைத்தக்க மாண்புடைய பெண்ணாகத், தற்காத்துத்தற் கொண்டனர். பேணுந்தகை சான்ற சோர்விலாதவராக, மனையறத்தின் வேரனையராக நாம் காண்கின்றோம்.

தமது குலதெய்வமாகிய மயலணிக் கந்தசுவாமியார், சிவன் ஆகிய தெய்வங்களில் அயராதபக்தியுடையவராக இருந்து ஆலய முன்னேற்றத்திற்காகப் பல திருப்பணிகளைச் செய்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சுன்னாகம் குமாரசாமிப் புலவரின் பேர்த்தியாக அவதரித்து அவர்தம் குலப்பெருமைகாத்த அம்மையாரின் இழப்பு உலகிற்கு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். அவரைப் பிரிந்து வாடும் அவரது கணவருக்கும், குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறிக்கொண்டு அவரது ஆத்மா இறைநிலையில் சாந்தியடைய எம்பெருமானை வணங்குகின்றேன்.

இணுவில்.

அன்புள்ள மாணவி
**பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளை**
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளமற்ற வெள்ளை உள்ளம் படைத்தவர்

"மங்கை அக்கா" என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலத்தின் மறைவு எமக்குத் துயரம் மிகுந்த அனுபவம். அவர் கொழும்பு மருத்துவமனையில் மறைவுற்ற செய்தியைக் கேட்டபோது மனதில் வந்த எண்ணங்களை இங்கு பதிவு செய்கிறேன்.

அவருடைய வாழ்க்கை பல பரிமாணங்களைக் கொண்டது. ஆசிரியப் பயிற்சிக்கல்லூரி உபஅதிபர், யாழ் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் இராமநாதன் கல்லூரி அதிபர், கோயிற் தொண்டர், பேச்சாளர், சமூக சேவகி என்பன சில. முப்பத்திஐந்து ஆண்டுகள் நான் பழகிய அனுபவம் மட்டும் இங்கு குறிப்பிடப்படுகின்றன.

அவர் வாழ்க்கைநெறி தமிழ் சைவப்பாரம்பரியத்தில் வைத்திருந்த இறுக்கமான பிடிப்பு. இது அவரது பாட்டனாரின் சொத்துப் போலும். குமாரசுவாமிப்புலவர் நாவலர் பெருமானின் போதனைகளால் ஆட்கொள்ளப்பட்டு சமயத் தொண்டு ஆற்றியவர். புலவரைப் போன்று ஆடம்பரமற்ற தூய்மையான வாழ்க்கையையே மங்கைஅக்கா விரும்பினார். அற்ப ஆசைகள் அவரை அணுகியதில்லை. அவர் வீட்டில் தொலைக்காட்சி போன்ற நவீன சாதனங்களைக் காணமுடியாது. மாறாகப்பாரம்பரிய பண்டைய நூல்கள் நிறைய உண்டு. கல்வியை விரும்பியவர்களுக்கு ஊக்கமும் உதவியும் அளிப்பது அவர் இயல்பான குணம்.

அவர் தனது கணவருக்குற்ற வாழ்க்கைத் துணைவியாகக் கடைசி வரை பணியாற்றியதும், உற்றார், உறவினர்களை வரவேற்று விருந்தோம்பல் செய்ததும் பலரும் அறிந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடன் பழகும் போது அவருடைய நேர்மையான சிந்தனையும் நேயமான உள்ளமும் மனதைக் கவரும். உளத்தில் உள்ளதை வார்த்தைகளால் மழுப்பாமல் விழுங்காமல் தெளிவாகக் கூறுவது அவர் வழக்கம்.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று கூறும் பழக்கம் அவரிடம் இல்லை. மாசற்ற மனம் அவரின் சிறப்பான குணம்.

அவர் ஆத்மா சாந்தியடைவதாக.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து
அறன் ஆகுல நீர பிற" – குறள் 34

**தி. கணேஸ்வரன்**
**அவுஸ்திரேலியா.**



**இராமநாதேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகத்தின் போது உரையாற்றுகிறார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்துக் கட்டுரைகள்

அமரர்

மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

அவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளிலிருந்து

தேர்ந்தெடுக்கப்பட்டவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில்



இராமநாதன் கல்லூரி வித்தக வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை ஆதீனத்தில் கந்தசஷ்டி தொடர்சொற்பொழிவிற்காகக் கௌரவிக்கப்படுகிறார்.




சிவத்தமிழ்ச் செல்வியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிப்
பிரிவுபசாரத்தில் தம்பதிகள்



பாதயாத்திரையின் போது
ஆத்மஜோதி நா. முத்தையா குழுவினரோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரம் நாட்டுகிறார் இராமநாதன் கல்லூரி – பவளவிழா
14-10-1988




இராமநாதன் கல்லூரி
1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னை நினையத் தருகின்றான்

சைவமக்கள் வழிபாடு செய்யும் பொழுதும் கருமங்களை மேற்கொள்ளும் பொழுதும், முதலிலே விநாயகக் கடவுளை வழிபட்ட பின்னரே ஏனைய தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது மரபாகும். விநாயகக்கடவுள் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களிலும் மிக அண்மைக் காலத்தில் பாடப்பெற்ற பாரதியார் பாடல்களிலும் காணப்படுகின்றன. இலக்கிய நூல்கள் கவிதைகள் மற்றும் புதிய ஆக்கங்கள் செய்யும் பொழுது விநாயகரைத் துதித்து அருள்பெற்று பாடுவது வழக்கமாகக் காணப்படுகிறது. சிவஞான போத மங்கல வாழ்த்திலே

"கல்லால் நிழன்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே"

என்று கூறப்பட்டுள்ளது.

கலைஞானம் முதலிய அனைத்து ஞானங்களையும் தன் நல்லடியார்களுக்கு விநாயகப்பெருமான் வழங்குகிறார். ஆன்றோர்கள் வழிநின்று தான் தொடங்கிய காரியம் முட்டின்றி முடியவேண்டும் என விநாயகப்பெருமானை வழிபட்டு மெய்கண்டார் சிவஞானபோதத்தை மங்கல வாழ்த்துடன் ஆரம்பிக்கின்றார். இறைவனுக்கு மூத்த மகனாரான காரணத்தால் மூத்த பிள்ளையார், மூத்த நாயனார் என்று அடியார்கள் அழைத்து மகிழ்கிறார்கள். அடியார்களுடைய இடையூற்றை நீக்கி அருள்புரியவே பிள்ளையார் தோன்றியருளினார். அடியார்களுடைய வினைகளைத் தீர்க்க விழைந்த சிவனும் உமையும் பிள்ளையார் தோன்றக் காரணமாக இருந்தனர் என்பதைப் பின்வருமாறு திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிடியதன் உருஉமை கொள மிகு கரியது
வடிகொடு தனதுஅடி வழிபடும் அவர்இடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்முறை இறையே"

சம்பந்தரும் சிறுத்தொண்டநாயனாரும் சமகாலத் தவர்கள். தானைத் தலைவனாகிய பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்டர் இரண்டாம் புலிகேசியை வென்று வாதாபியிலிருந்து எடுத்து வந்த கணபதியின் திருவுருவச் சிலையை திருச்செங்காட்டங்குடியில் எழுந்தருளச் செய்தார். விநாயகர் வழிபாடு மக்களுடைய மனதிலே நம்பிக்கையை ஏற்படுத்திய காரணத்தால் மிக விரைவாகப் பரவியது எனலாம். குளக்கரைகளிலும், வயற்புறங்களிலும், அரசமரத்தடியிலும், சாலைகளின் ஓரங்களிலும் ஆற்றங்கரைகளிலும், பிள்ளை படிமங்களை அமைத்துப் பூவும் நீரும் கொண்டு மக்கள் வழிபாடு செய்தனர். மிகவும் எளிமையான முறையில் இவ்வழிபாடு நடைபெற்று வந்த காரணத்தால் மக்கள் பக்தியோடும், நம்பிக்கையோடும், தாங்கள் விரும்பிய வரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என எண்ணினர். சிவபெருமான் முப்புரங்களை அழிக்கச் சென்ற சமயம் விநாயகரை வழிபடாத காரணத்தால் தேரின் அச்சு உடைந்த நிகழ்ச்சியை அருணகிரிநாதர் திருப்புகழிலே

"முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா"

எனப்பாடி விநாயக வழிபாட்டின் முதன்மையை விளக்கியுள்ளார். இந்துக்கள் மட்டுமன்றி பௌத்தர்கள், சமணர்கள் ஆகியோரும் மிக விரும்பி விநாயகப் பெருமானை வழிபடுகின்றனர். பல்வேறு நாட்டவர்களும் விநாயகப்பெருமானை வணங்கியதாக கல்வெட்டுக்கள் மூலமும், ஆங்காங்கே உள்ள ஆலயங்கள் மூலமும் அறிய முடிகிறது. ஆப்கானிஸ்தானம், நேபாளம், தீபெத்து, மங்கோலியா, பர்மா, சீயம், ஜாவா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளில் விநாயக வழிபாடு பரவியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினொராம் திருமுறையில் பன்னிரு அடியார்கள் பாடிய நாற்பது பிரபந்தங்கள் உள. கபிலதேவர் இயற்றிய மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, அதிராவடிகள் பாடிய மூத்த பிள்ளையார் திருமும்மணிக் கோவை, நம்பியாண்டார்நம்பி அருளிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை என்பன விநாயகரைப் பற்றிய பாடல்களாக பதினொராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. கபிலதேவநாயனாரால் அருளிச் செய்யப் பெற்ற மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலையில் இருபது பாடல்கள் உள. முதலாவது பாடல் விநாயகப் பெருமானைக் காதலால் கைகூப்பி வணங்குவதால் வாக்குவன்மை, காரியசித்தி, செல்வம், பெருமை என்பன ஏற்படும் என்று கூறுகிறது. மக்கள் முன்செய் நல்வினை தீவினைப் பயன்களை அனுபவித்தே தீரவேண்டும். பிறவிப் பிணியை நீக்க வேண்டு மானால் விநாயகர் அருள் இன்றியமையாதது எனப் பின்வரும் பாடல் கூறுகிறது.

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்டை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து"

வினைகள் எம்மைத் தொடர்ந்து வருகின்றன. அவற்றிலிருந்து எவரும் தப்பமுடியாது. அதன் பயன் பிறவிகள் தோறும் தொடருகின்றன. எனவே வேரோடு ஒரு மரத்தை வெட்டினால் அது மீண்டும் தளைக்கமாட்டாது. அதேபோல வினைகளை வேரோடு அறுக்க வல்லவர் வினைக்குக் காரணமான வேட்கையை தணிக்கவல்லவன், விண்ணிற்கும் மண்ணிற்கும் தலைவனான விநாயகப் பெருமானே. ஆதலால் எல்லோரும் நாம் போற்றி வணங்க வேண்டும் என கபிலதேவர் நமக்கு வழிகாட்டுகிறார்.

நம்பியாண்டார் நம்பிகள் திருநாரையூரில் எழுந் தருளியிருக்கும் பொல்லாப் பிள்ளையாரை மெய்யன்போடு வழிபட்டு, தந்தையாரில்லாத சமயம் பூசை செய்யும் கடப்பாடு உடையவர். சிறுவனான நம்பி அன்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த பூசையை ஏற்று அவர் முன்னே தோன்றி அருள்பாலித்து திருமுறை களைத் தொகுப்பித்தார் ஞானக்கொழுந்தான பிள்ளையார். சங்கத் தமிழ் மூன்றையும் ஔவையாருக்கு அருளி, செஞ்சொற்புனை மாலை சிறந்திட அருணகிரிநாதருக்கு உறுதுணையாக நின்றும், கவிபாடும் சக்தியை நம்பிகளுக்கு கொடுத்ததுமான நிகழ்ச்சிகள் பிள்ளையாரின் அருள்பாலிக்கும் ஆற்றலைக் காட்டுகிறது. தினந்தோறும் பொல்லாப் பிள்ளையாரை வழிபட்டு, பக்திமேலீட்டினால் தனது அருளனுபவத்தை "விநாயகர் இரட்டை மணிமாலை" என்ற சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார். இதிலுள்ள இருபது பாடல்களும் நம்பிகளின் கவிதா சக்தியையும், விநாயகரின் மகத்துவத்தையும் எடுத்து விளக்குகின்றன. முதலில் புன்னை மரங்கள் நிரம்பிய சோலைகளுடைய செழிப்பான வளம் நிரம்பிய திருநாரையூர் என்ற ஆலயத்தின் அமைவிடத்தைக் கூறுகின்றார். அடுத்ததாக தன்னுடைய இடர்களை எல்லாம் நீக்கி, தன்னை நினைக்கச் செய்து உள்நின்று உணர்த்திப் பாடத்துணைநின்ற செய்தியை விளக்குகின்றார். நீர்வளம் மிக்க அவ்வூரில் நாரைகள் மீனை உண்ணுவதற்கு ஏராளமாக அங்கு கூடுகின்றன என வர்ணித்து இருமரங்களாகிய அரசு, அத்தி என்ற பெயர்களால் சிவனையும் பிள்ளையாரையும் குறிப்பிட்டுள்ளார். மேற்கூறிய விடயத்தை பின்வரும் பாடல் மூலம் உணரலாம்.

"என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்தது
தன்னை நினையத் தருகின்றான் – புன்னை
விரசுமகிழ் சோலைவியன் நாரையூர் முக்கண்
அரசு மகிழ் அத்திமுகத் தான்"

வாழ்க்கையில் எமக்கு ஏற்படும் துன்பங்கள் பலவாகும். இறுதியாய் நாங்கள் மரணத்தை அடையும் போது யமபயம் ஏற்படுகிறது. எனவே எமது அல்லல்களை நீக்கி தேவருலகம் சேர்ப்பிப்பான் என நம்பியாண்டார் நம்பி பாடியுள்ளார்.

"கோவிற் கொடிய நமன் தமர்
கூடா வகைவிடுவன்
காவிற் திகழ்திரு நாரையூர்
பதியிற் கரும்பனக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேவற் கரிய இருமதத்
　　　　தொற்றை மருப்பின முக்கண்
ஏவிற் புருவத் திமையவர்
　　　　தான் பெற்ற யானையே"

என்ற பாடல் மூலம் யமபயம் போக்க தும்பிக்கையான் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. திரிகரண சுத்தியுடன் ஐந்து கரத்தையுடையனான ஆனைமுகக்கடவுளை புந்தியில் வைத்து போற்றுவது எங்கள் கடமையாக அமைகிறது.

□□



மாணவொருவருக்குப்
பரிசு
வழங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மழை

நவராத்திரி ஒரு விழாவாகவும், விரதமாகவும் சைவ மக்களால் மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட ஒன்பது தினங்களிலும் முறையே துர்க்கை, லஷ்மி, சரஸ்வதி ஆகிய மூவருக்கும் விசேட பூசை வழிபாடு நடைபெறுகிறது. நவராத்திரி விழா பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், காரியாலயங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் எங்கும் பக்தியுடன் கொண்டாடப்படுவது மரபு வழி வந்த ஒரு நிகழ்ச்சியாகும். எமது வாழ்க்கையில் பல்வேறு காலக்கட்டங்களில் லஷ்மி கடாச்ஷம் வேண்டி வழிபடுகிறோம். புதுமனை புகும்பொழுது மகாலஷ்மி திருவுருவப் படத்தை பிள்ளையார், முருகப்பெருமான் படங்களோடு சேர்த்துப் பூசை அறையிலே வைத்து, தினமும் வழிபாடு செய்யும் வழக்கம் ஆணித்தரமாக நிலை பெற்றுள்ளது. திருமணத்தில் மாங்கல்ய பூசை ஸ்ரீமகாலஷ்மி பூசையாக அமைகிறது. வரலஷ்மி விரதம், லஷ்மி நாராயண விரதம் என்பனவும் லஷ்மி அருள் வேண்டி கடைப்பிடிக்கப் படுகின்றன. கும்பாபிஷேகக் கிரியைகளில் லஷ்மி ஹோமம் முக்கிய இடம் பெறுகிறது.

லஷ்மி கடாக்ஷம் இருந்தால் வாழ்வு சிறப்பான வாழ்வாக அமையும். ஒருவருக்குத் தேவையான காணி, நிலம், மங்களரமான இல்லம், சிறந்த கல்வி, புகழ், பண்புள்ள வாழ்க்கைத் துணைநலம், தவறாத சந்தானம், நோயற்ற வாழ்வு, நல்லவர்கள் நட்பு, செல்வம் என்பன ஒருங்கே அமைய லஷ்மி அருள் இன்றியமையாதது. சகல செல்வங்களின் உருவாகவும், அவற்றுக்கு அதிட்டான தேவதையாகவும் லஷ்மிதேவி விளங்குகிறாள். மேலும் அமைதி, தூய்மை, சாந்தி, ஒளி, உண்மை, நன்மை ஆகியவற்றின் வடிவமாவாள். விரும்பத்தகாத பண்புகளான காமம், கோபம், மோகம், மதம், அகங்காரம் முதலியவற்றை வெறுப்பவளாக சர்வமங்கள சொரூபிணியாகக் காட்சியளிக்கிறாள். சாதாரண நிலையில் உலகியலிலே இவள் லஷ்மி போல இருக்கிறாள், இந்த வீட்டில் மகாலஷ்மி எழுந்தருளி இருக்கிறாள் என்று மக்கள் கூறுவதிலிருந்து லஷ்மியின் மகிமையை உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஷ்மி வழிபாட்டில் அஷ்டலஷ்மி வழிபாடு அமைந்துள்ளது. மேலும் மகாலஷ்மி எழுந்தருளியிருக்கும் இடங்கள், பொருள்கள் பலவாகும். கழுவி, மெழுகி தூய்மை பேணப்படும் இடங்கள், மனத்திலே மாசு இல்லாத உள்ளங்களில் திருமகள் விரும்பித் தானே வருகைதந்து எழுந்தருளியிருப்பாள். பசுவை சைவ மக்கள் அன்புடன் வளர்த்து பட்டிப்பொங்கல் விழா கொண்டாடி தமது நன்றிக்கடனைச் செலுத்தி மகிழ்வர். பசுவில் லஷ்மி எழுந்தருளியிருப்பதால் திருமண வைபவம், கும்பாபிஷேகம் போன்ற விசேட நிகழ்ச்சிகளில் கோபூசையும், வழிபாடும் நடைபெறுகின்றன. புதுவீடு அல்லது ஆலயம், கட்டப்புகுமுன் பசுக்கூட்டத்தை அந்த நிலத்திலே சில தினங்களுக்குக் கட்டி வைப்பார்கள். சிவாலயங்களில் இறுதியாக கோபூசை நிகழ்வது வழக்கமாகும். பசுவை அன்போடு வளர்த்து, அளவோடு பயன்படுத்தி எமது கடமையை முறையாகச் செய்தால் அது லஷ்மி பூசையாகிறது. சைவ மக்களின் கலாசார சின்னமாக விளங்கும் மங்களகரமான குத்து விளக்கில் மகாலஷ்மி எழுந்தருளியுள்ளார். லஷ்மிதேவி வாசஞ்செய்யும் இடங்கள் வெற்றிலை, தேங்காய், வேம்பு, மஞ்சள், குங்குமம், எலுமிச்சம்பழம், பவுண், நவரத்தினங்கள், துளசி என்பனவாகும்.

ஸ்ரீலஷ்மி மகாவிஷ்ணுவின் தேவியாவார். பாற்கடலில் தோன்றி திருமால் திருமேனியில் மின்னற் கொடிபோலக் காட்சியளிக்கிறாள். செந்நிறத் திருமேனியுடன் செந்தாமரையில் செந்தாமரைமலர்களை இரு கரங்களிலும் ஏந்தி அபய வரதங்களுடன் விளங்கும் திருமகள் அழகு சொற்களால் விளக்கமுடியாதது. அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியாக திருமகள் அழகை அபிராமிப்பட்டர் விளக்குகிறார். சங்கரர் பாடிய "கனகதாரா" தோத்திரத்தை பொன்மாரி என்ற பெயரில் கவிஞர் கண்ணதாசன் தமிழாக்கம் செய்துள்ளார். அப்பாடல்களிலே அம்பாளுடைய அழகு தத்ரூபமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. அம்பாளுடைய கண்களுக்கு மிக விசேடம் உண்டு என்பதை மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி என்ற பெயர்கள் மூலம் அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகளின் விழிகளை "பாதிக்கண் திறந்து மூடி" எனவும் "அற்புத விழிகளாலே" "அதிசய திலமானால் அன்னநின் விழிகள் கண்டு" "எனவும் நீருண்ட மேகக் கண்கள்" எனவும் என கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ளார். லஷ்மிதேவியின் திருவதனச் சிறப்பை

"அன்றலர் கமலம் போன்ற
அழகிய வதனி போற்றி" எனவும்
"முழுநிலா வடிவே போற்றி" எனவும்,
"கமலப்பூ வதனம் போற்றி"

எனவும் வர்ணித்துள்ளார்.

சங்கரர் ஒருநாள் வழமைபோல உஞ்ச விருத்திக் காக வீடு வீடாகப் போனார். அவர் அன்று ஒரு ஏழைப்பிராமணனுடைய வீட்டுவாசலிலே நின்று பிச்சை கேட்டார். வீட்டுக்காரர் மிகவும் வறுமையில் வாடிய நிலையில் இருந்த காரணத்தால் எதுவும் சங்கரருக்குக் கொடுக்க முடியவில்லை. வளம் சுருங்கிய போதும் மனம் சுருங்கவில்லை. பிச்சை தேடி வருபவர்களுக்கு தாராளமாகக் கொடுக்க வேண்டும் என்ற தர்ம சிந்தனை அந்தணப் பெண்ணிடம் காணப்பெற்றது. தெய்வக் குழந்தையாகிய சங்கரர் வாசலில் நிற்கும் போது எவ்வாறு எதுவும் தருவதற்கு இல்லை எனக் கூறுவது என எண்ணி அழுதார். இறுதியாக ஒரு அழுகிய நெல்லிக்கனியைத் தேடி எடுத்து அதனைக் கொடுக்க மனம் வருந்தி வேறு வழியின்றிக் கொடுத்தார்.

அப்பெண்ணின் கருணை உள்ளமும், அறச் சிந்தனையும், வாரி வழங்கவேண்டும் என்ற மனமும் சங்கரர் மனதை உருகச் செய்தது. அந்தப் பிராமணக் குடும்பத்தின் தரித்திரத்தை நீக்கி சகல சம்பத்துக்களையும் ஏற்படுத்த திருமகளை நோக்கி "கனகதாரா தோத்திரம்" பாடினார். பிராமணத் தம்பதிகள் முற்பிறப்பில் செய்த வினை தீரும் வரை லஷ்மி அருள்புரிய மறுத்துவிட்டாள். உடனே சங்கரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய உயர் பண்புகளை எல்லாம் திருமகளுக்கு எடுத்துக்கூறி "அம்மா மகாலஷ்மி இவளுக்கு இருக்கிற மாதிரி உனக்கும் அன்பு நிறைய இருக்கிறது. ஆதலால் மிகக் கண்டிப்பாக நியாயம் மட்டும் வழங்காமல் அன்பைக் காட்டி அனுக்கிரகம் பண்ணு" "உன்னுடைய கடாசஷமாகிய கார்மேகத்தை இவர்கள் பக்கம் திருப்பிவிட்டு செல்வம் என்ற மழையைப் பொழிந்துவிடு" எனக் கூறினார். பின்னர் ஏழைப் பிராமணப் பெண்ணுக்காக தனது உள்ளக் கருத்தை எல்லாம் தொகுத்து கனகதாரா தோத்திரம் பாடினார். உடனே அழகிய நெல்லிக்கனியைக் கொடுத்த அந்தணப் பெண் வீட்டிலே பொன்னாலான நெல்லிக்கனிகள் மழைபோலப் பொழிந்தன. பிராமணத் தம்பதிகள் வறுமை நீங்கி திருமகள் அருளால் சிறப்புடன் வாழத்தக்க ஒருநிலை ஏற்பட்டது.

திருமகள் வழிபாட்டின் மூலம் பல நற்பலன்கள் கிட்டும்.

"இந்திரப் பதவி கூடும்
இகத்திலும் பரங் கொண்டாடும்
இணையறு செல்வம் கோடி
இல்லறத்தின் நடுவில் சேரும்" என்றும்

"செய்ததீ வினையை எல்லாம்
தீர்க்கின்ற நெருப்பே போற்றி
சிறுமையைப் பெருமையாக்கும்
திருப்பதம் போற்றி! போற்றி" என்றும்

கவிஞர் கண்ணதாசன் திருமகள் வழிபாடு மூலம் துன்பம் நீங்கி இன்பம் பெறலாம் எனப் பாடியுள்ளார். அரும் பொருளும் நிறைந்த இப்பாடல்களை நவராத்திரி தினங்களில் மட்டுமல்ல தினந்தோறும் பாடுவது சைவமக்களுடைய தலையாய கடமை.

□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்களிலே சிறந்தது திருக்கார்த்திகை

தை மாதம் தைப்பொங்கலுடன் ஆரம்பித்து, மார்கழி மாதம் ஆருத்ரா தரிசனம் வரை சைவமக்கள் பல விரதங்களை அனுஷ்டிப்பதோடு, தெய்வீகப் பண்டிகைகளையும் கொண்டாடி இறையருள் பெறுகின்றனர். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையன. நவராத்திரி, கார்த்திகை என்பன விரதமாகக் கருதப்படுவதோடு, விழாவாகவும் கொண்டாடப்படுகின்றன. பக்தி ஏற்படுவதற்கும், பக்தி மூலம் முத்தி அடைவதற்கும் இவை உறுதுணையாக அமைகின்றன எனச் சமய நூல்கள் ஆணித்தரமாகக் கூறியுள்ளன. பிறைசூடிய பெருமானைத் திங்கட்கிழமை களிலும், செவ்வாய் என்ற கிரகத்தால் ஏற்படும் தோஷம் நீங்க செவ்வாய்க் கிழமைகளில் முருகப் பெருமானையும், வியாழக் கிழமைகளில் தட்சணா மூர்த்தியையும், சனிக்கிழமைகளில் சனீஸ்வரனையும், ஞாயிற்றுக் கிழமைகளில் சூரிய தேவனையும் வழிபட்டு சைவமக்கள் துன்பம் நீங்கி இன்பம் பெறுகின்றனர். எனவே ஆலயங்களிலே இறைவனை மெய்யன்புடன் வணங்கிடப் பண்டிகைகளும், விரதங்களும் மரபு வழியாக வகுக்கப்பட்டதுடன் இது பற்றிய தோத்திரப் பாடல்களும், புராணக்கதைகளும் பல உண்டு.

விநாயகப் பெருமானுக்கு சதுர்த்தியும், சிவனுக்கு சிவராத்திரியும் மிக உகந்தவையாக இருப்பது போல, முருகப்பெருமானுக்கு சஷ்டியும், கார்த்திகையும் மகிமை வாய்ந்த விரதங்களாக அமைகின்றன. முருகப்பெருமானுக்கு வார விரதமாக வெள்ளிக்கிழமையும், நட்சத்திர விரதமாகக் கார்த்திகையும், திதி விரதமாகக் கந்தசஷ்டியும் சிறந்தவை எனக் கந்தபுராணம் காட்டுகிறது.

இமயமலைச் சாரலிலே உள்ள சரவணப் பொய்கையிலே சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய ஆறு அக்கினிப் பொறிகளும் ஆகாயத்தில் வாயுபகவானாலும் அக்கினி தேவனாலும் சுமந்து செல்லப்பட்டு கங்கா நதியிலே சேர்க்கப்பட்டன. அவை நீந்திச் சென்று சரவணப்பொய்கையை அடைந்தன. அங்கு ஆறு தாமரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்களிலே அவை ஆறு அழகிய குழந்தை களாகக் காட்சியளித்தன. சிவனும் உமாதேவியாரும் சரவணப்பொய்கைக்கரைக்கு எழுந்தருளி வந்து இறைவன் ஆணைப்படி உமாதேவியார் குழந்தைகளை அணைத்த பொழுது ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும் கொண்ட ஒரு திருமுருகன் உதித்தனன் உலகம் உய்ய.

சரவணப்பொய்கையில் ஆறு கார்த்திகை மகளிர் ஆறு குழந்தைகளையும் பாலூட்டி, துயிலச் செய்து வளர்த்தனர். அவர்கள் அப்பொழுது சிவபெருமானை வணங்கி நின்ற பொழுது கைலாசபதியானவர் "நம்முடைய குமாரனாகிய இவன், உங்களால் வளர்க்கப்பட்டமையால் கார்த்திகேயன் என்னும் பெயரைப் பெறக்கடவன். யாவராயினும் உங்கள் நட்சத்திரத்திலே இவனை மெய்யன்போடு வழிபடுவாராயின் அவர் வேண்டும் வரங்களைக் கொடுத்து முத்தியை அருளிச் செய்வோம்" எனத் திருவாய் மலர்ந்தருளினார். எனவே கார்த்திகை விரதத்தின் மகிமை சொல்லுந்தரமன்று. இவ் விரதம் முனிவர்களாலும் பக்தியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

நாரதமுனிவர் விநாயகக் கடவுளின் திருவடிகளில் விழுந்து வணங்கி ஏழு முனிவர்களுள் தான் மிக உயர்ந்த நிலையடையப்பெற ஒரு விரதத்தைக் கூறியருளுமாறு கேட்டார். அவ்வேளை விநாயகக் கடவுள் நாரதரை நோக்கி "முனிவனே, நீ நமது தம்பியாகிய சுப்பிரமணியனை வழிபட்டுக் கார்த்திகை நட்சத்திர விரதத்தை பன்னிரண்டு வருடகாலம் சிரத்தையோடு அனுஷ்டிக்கக் கடவாய், நீ நினைத்ததைப் பெறுவாய், இது திண்ணம்" என அருளிச் செய்தார்.

ஒரு வருடத்திலே பதின்மூன்று தினங்கள் கார்த்திகை விரதமாக அமையும். விரதங்களை எவ்வாறு அனுஷ்டிக்க வேண்டும் எனச் சான்றோர்கள் வகுத்துள்ளதோடு புராணங்களும் எடுத்து விளக்கியுள்ளன. கார்த்திகை மாதத்தில் இடம்பெறும் கார்த்திகை திருக்கார்த்திகை எனப்படும். கார்த்திகை விரதத்தை, மேற்கொள்ள விரும்பு பவர்கள் அன்று சங்கற்பம் செய்து முறையாக விரதத்தைக் குறிப்பிட்ட காலம் வரை மேற்கொள்வது அதிக நன்மைதரும் என்பது அறிஞர்கள் கருத்தாகும். பல மன்னர்களும், அந்தணர்களும் இவ் விரதத்தை அனுஷ்டித்து வேண்டிய வரங்களைப்பெற்று மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதம் என்றால் ஒரு நியதி, ஒழுங்கு, கட்டுப்பாடு எனப் பொருள் கூறலாம். ஆறுமுகநாவலர் விரதம் பற்றிக் கூறிய கருத்து ஈண்டு சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். மேலும் "காப்பது விரதம்" என்பது மிக ஆழமான கருத்தைக் கொண்டுள்ளது. உபவாசமிருந்து விரதங்களை அனுஷ்டிப்பது மிகவும் உத்தமமானது. இவ்விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் பரணி நட்சத்திரத்திலே ஒரு பொழுது உணவருந்தி கார்த்திகை விரதநாளில் உபவாசமிருந்து ரோகிணி நட்சத்திரத்திலே பாரணை செய்ய வேண்டும். விரதங்களை மேற்கொள்பவர்கள் சைவாசாரத்தைக் கடைப்பிடிப்பது இன்றியமையாதது.

இருப்பிடம், உடை, உணவு, உள்ளம், உரை, உணர்வு எல்லாம் தூய்மையாக அமைவதோடு சாத்துவிக குணம் ஏற்படத்தக்க முறையில் உணவை உட்கொள்ளவேண்டுமென புராணங்கள் வற்புறுத்தியுள்ளன. சுந்தரமூர்த்தி நாயனார் சிதம்பரம் சென்று குணம் ஒரு மூன்றும் சாத்துவிகம் அடைந்த நிலையில் தில்லைக்கூத்தனை வழிபட்டதாகப் பெரியபுராணம் கூறுகிறது. திருமுறைகள், புராணங்கள், முருகப்பெருமான் மீது பாடப்பெற்ற கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், திருமுருகாற்றுப்படை என்பவற்றை மெய்யன்போடு ஓதுவது அதிக நன்மை பயக்கும். இவற்றை ஓதுவதன் மூலம் மனம் பக்திப்பரவசப்பட்டு முருகப்பெருமானிடம் ஒன்றிவிடும்.

முருகன் ஆலயங்களில் கார்த்திகைத் தினத்தன்று சிறப்பாகத் திருவிழா நடைபெறுவதோடு அடியார்களும் பெருந்தொகையாகக் கூடுவார்கள். விரதங்களும் விழாக்களும், உடல், உள, ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாகின்றன. சமூக ஒற்றுமை, தர்மசிந்தனை, உயர்பண்புகள், சமய கலாசாரம் என்பன வளர விரதங்களும் விழாக்களும் உதவுவதோடு இம்மையிலும் மறுமையிலும் பேரின்பப் பெருவாழ்வு ஏற்பட உதவுகின்றன.

□□

- உதயன்
12-08-2001
நல்லூர்க் கந்தசுவாமி கோவில்
கார்த்திகைத் திருவிழாவன்று
பிரசுரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்த நோக்கில் வள்ளி திருமணம்

பக்தர்கள் பக்தி மேலீட்டினால் இறைவன் மீது திருப்பள்ளி எழுச்சி, திருப்பல்லாண்டு, திருவூஞ்சல் என்பவற்றைப் பாடியுள்ளனர். ஆலயங்களில் இறைவனுக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறுகிறது. இவையெல்லாம்

"பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கு மொப்பின்மையான்"

– திருவருட்பயன்

தன்மையுடைய இறைவனுக்குத் தேவைதானா என்பாரும் உளர். பக்தர்கள் தாங்கள் வாழ்வதற்கும், வாழும் முறையை அறிந்து கொள்வதற்கும் இவ்வாறு செய்கிறார்கள் எனலாம். புலவர் குழாம் போற்றும் புனிதமிகு கச்சியப்ப சிவாசாரியார் சைவசித்தாந்த அடிப்படையில் கந்த புராணத்தைப்பாடி சைவ உலகுக்கு வழங்கியுள்ளார். உபநிடதங்களிலும் திருமந்திரத்திலும் கூறப்பெற்ற சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் சாதாரண மக்களும் தெளிவாக அறியும் வண்ணம் பிற்காலத்தில் திருமுறைகள், புராணங்கள் இதிகாசங்கள் ஆகிய பல நூல்களில் எழுதப்பெற்றன.

கந்தபுராணத்தில் சித்தாந்தக் கருத்துக்கள் பல வலியுறுத்தப் பெற்றுள்ளன. யுத்தகாண்டத்தில் சூரன், சிங்கன், தாரகன் மூலம் ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றின் தன்மைகள் விளக்கப்பெற்றுள்ளன. வள்ளிதிருமணம் சித்தாந்தக் கோட்பாட்டை மிக இலகுவாக விளக்குவதோடு மக்கள் மனதைக் கவர்ந்த ஒரு பகுதியாகவும் அமைந்து சினிமாப் படமாகவும், நாடகமாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லிசையாகவும், இசை நாடகமாகவும், கதாப்பிரசங்கமாகவும் பலமுறை பார்த்தும் கேட்டும் பக்தர்கள் பரவசமடைந்துள்ளனர். எல்லாம்வல்ல பரம் பொருளின் அருட்செயல்களை

"ஆக்கி யெவையும் அளித்தா சுடனடங்கப்
போக்குமவன் போகாப் புகல்"

எனத் திருவருட்பயன் கூறுகிறது.

பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் பற்றி பல நூல்கள் விளக்கியுள்ளன. இதனை அடிப்படையாக வைத்தே கந்தபுராணத்தில் வள்ளி திருமணம் பாடப்பெற்றது. முத்தியின்பம் பெறுவதற்கும் வழிகாட்டுவது சைவசித்தாந்தம்.

"சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆரு யிர்த்தொகை
வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே"

எனக் காசிப முனிவர் தன் புதல்வர்களுக்கு உபதேசிப்பதைக் கந்தபுராணம் கூறுகிறது. முருகப்பெருமான் தெய்வயானையை திருப்பரங்குன்றத்தில் திருமணம் செய்த பின் வள்ளிநாயகியாரைத் தொண்டை மண்டலத்தில் உள்ள மேற்பாடி என்னும் ஊரில் முருகப்பெருமான் திருமணம் செய்தருளினார். ஞானசத்தி, கிரியாசத்தி யாகிய இருவரும் முருகப்பெருமானுக்கு இருமருங்கிலும் வீற்றிருந்தனர். சித்தாந்தக் கோட்பாட்டின் பிரகாரம் இறைவன் மக்கள் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப பிறவிகளைக் கொடுத்து, வாழ்க்கையிலே பல அனுபவங்களை ஏற்படுத்தி பரிபக்குவ நிலையை உண்டாக்கி அவர்களுக்கு மோட்ஷத்தை அருளுவார். மகட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறின்மையால் வருந்திய நம்பிராசன் வேட்டையாடச் சென்ற பொழுது வள்ளிக்குழியில் திருமகள் போன்ற அழகுடைய ஒரு பெண் குழந்தையைக் கண்டெடுத்து தன் சிறு குடிலில் வளர்த்து வந்தான். சாதாரண சைவ மக்களுடைய வாழ்க்கை முறை, வழிபாட்டுமுறை, ஆசாரம் என்பன வேட்டுவ மக்களுடைய வாழ்க்கை முறையிலும் பார்க்க முற்றும் வேறுபட்டது. வேட்டுவ குலத்தவர்கள் சுபதினங்களிலே குறிஞ்சிப்பறை ஒலிப்பக், குரவைக் கூத்தாடி வெண்மையாகிய அரிசியையும் மலரையும், மஞ்சளையும் தூவி, ஆட்டுக்கடாவை அறுத்து வேலனைக் கொண்டு வெறியாட்டுவித்து முருகப்பெருமானை வணங்கினர்.

வேட்டுவர்கள் செய்த தவத்தின் பயனாக வள்ளிநாயகியார் அங்கு வளர்ந்து, தவழ்ந்து, தளர்நடை நடந்து, சிற்றில் இழைத்து, சிறு சோறு அட்டு, பெற்றோர் மகிழ பன்னிரண்டு வயதை எய்தினாள். தாய் தந்தையர்கள் தமது சாதி ஆசாரப்படி வள்ளி நாயகியாரை தினைப்புனங் காக்க வைத்தனர். முருகப்பெருமான் வள்ளிநாயகியாரை பரிபக்குவ நிலையடைந்து விட்டாரா எனப் பல பல விதமான வேடங்களைத் தாங்கி, தினைப்புனம் சென்று உணர்ந்து மகிழ்ந்தார். வேட்டுவ மக்கள் மத்தியில் வாழ்ந்தாலும் தாமரைப் பூ, பூச்சி புழுக்கள் நிறைந்த சேற்றில் வளர்ந்தாலும் மேலெழுந்து அழகும் நறுமணமும் குன்றாத மலராக விளங்குவது போல வள்ளி நாயகியார் தான் வளர்ந்த சூழலால் பாதிக்கப்படாது அருள் நாட்டம் உடையவராக வாழ்ந்தார் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

வள்ளிநாயகியார் தினைப்புனத்திலே அட்டதிக்கு களையும் பார்த்து தினைப்புனத்தைக் காக்கத் தக்கதாக பரணிலிருந்து தட்டை, குளிர், தழல் ஆகிய கருவிகளை ஏந்தி கிளி, மான், மரை, பன்றி என்பன அங்கு வராதவாறு பாதுகாத்தாள் என்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பூவைகாள் செங்கட் புறவங்காள் ஆலோலம்
தூவிமா மஞ்ஞைகாள் சொற்கிளிகாள் ஆலோலம்
கூவல் சேர்வுற்ற குயிலினங்காள் ஆலோலம்
சேவல்காள் ஆலோலம் என்றாள் திருந்திழையாள்"

எனக் கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணத்தில் விளக்கிக் காட்டுகிறார். மக்களுக்கு பற்று, பாசம் என்பன ஐந்து புலன்களாலும் ஏற்படுகின்றன. விட்டிற் பூச்சிகள் பிரகாசமான விளக்குகளால் கவரப்பட்டு அவைமீது விழுந்து மடிகின்றன. தூண்டிலில் உள்ள சிறு புழுவை உண்ண விரும்பி மீன்கள் புழுவை உண்ண எத்தனித்து, தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்றன. நறுமணத்தினாலே கவரப்பட்ட தேனீக்களும் தேன் அருந்த முற்பட்டுத் தமக்கு முடிவைத் தேடிக் கொள்கின்றன. ஆனால் வள்ளிநாயகியார் பற்றுகள், பாசங்கள் தன்னைப் பீடிக்காதவாறு அங்கு வந்த பறவைகளையும் மிருகங்களையும் விரட்டுவது மனத் தூய்மையை ஏற்படுத்துவதற்கு முயலும் ஒரு முயற்சியாகும். பற்றற்றான் தாள்களை அடைவதற்கு பற்றுகளைக் கைவிட வேண்டும் என்பது வள்ளுவர் வாக்கு. கந்தக் கடவுள் தினைப்புனத்தைக் காத்த வள்ளிநாயகியாருக்கு அருள்புரியக் கருதி, தனியே திருத்தணிகை மலையில் எழுந் தருளியிருந்தார் என்பதனை கச்சியப்ப சிவாச்சாரியார்.

"இந்த முறையில் இவள்ஏனற் புனங்காப்ப
அந்த வளவில் அவளுக் கருள்புரியக்
கந்த வரைநீங்கிக் கதிர்வே லவன்தனியே
வந்து தணிகை மலையிடத்து வைகினனே"

எனப்பாடி விளக்கியுள்ளார். அருளானது சிவத்தைக் காட்டி உலகத்தை மறைக்கும். ஆணவம் உலகத்தைக் காட்டி சிவத்தை மறைக்கும். வெயிலால் வருந்தியவன் மகிழ்ச்சியுடன் நிழலையடைவது போல மலங்களினால் துன்பப்பட்டவன் திருவருளைக் காணும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமகிழ்ச்சியுடன் தானாக அதைச் சேருவான். நாரதமுனிவர் மூலம் தினைப்புனங்காவல் புரிகிறார் இலக்குமியை ஒத்த வள்ளிநாயகியார் என்பதனை அறிந்த முருகப்பெருமான் மானுட வேடந்தாங்கி வேடுவனைப்போல வில்லும் அம்புந்தாங்கி தினைப்புனம் வந்தருளினார். வேடுவ வேடம் தாங்கிய முருகப்பெருமான் பலவிதமான ஆசை வார்த்தைகளைக் கூறி அவளைத் தன்வசப்படுத்த முயன்று அவள் பேரைக் கேட்டு, ஊரைக் கேட்டு பின் ஊருக்குச் செல்லும் வழியைக் கேட்டு மனமுருகி நின்ற நிலையை

"மொழியொன்று புகலா யாயின் முறுவலும் புரியா யாயின்
விழியொன்று நோக்கா யாயின் விரகமிக் குழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டா யாயின் மனமுஞ் சற் றுருகாயாயின்
பழியொன்று நின்பாற் சூழும் பராமுகந் தவிர்த்தி என்றான்"

எனக் கச்சியப்ப சிவாசாரியார் விபரிக்கிறார். அவ்வேளை நம்பிராசன் பல்வேறு வாத்தியங்கள் ஒலிப்ப தன் புதல்விக்கு வள்ளிக் கிழங்கு, தினைமா, தேன், காட்டாவின் பால் என்பவற்றைக் கொடுத்தான். உடனே வேடுவனாகக் காட்சியளித்த முருகப் பெருமான் வேங்கை மரமாக மாறினான். மேலும் மானுட வடிவந்தாங்கி அவளை அடைவதற்குப் பல இனிய வார்த்தைகளைக் கூறித் தோல்வி கண்டார். முற்றாகப் பற்றுகள் பாசங்கள் நீங்கிய நிலையில் அடிமரம் வேதங்களாகவும், நடுப்பகுதி ஆகமங்களாகவும், ஏனைய பகுதிகள் பல்கலைகளாகவும் காட்சியளித்த வேங்கை மரம் மூலம் வள்ளிநாயகியாருக்குச் சமய சாஸ்திர அறிவு திறம்பட ஏற்பட்டது மட்டுமல்ல பரிபக்குவ நிலை அடைவதற்கு ஏதுவாகியது.

ஆனால் முருகப் பெருமான் மோகம் தவிர்க்க முடியாத நிலையில் பல முறை அவள் முன்தோன்றி எண்ணிலாத பல வார்த்தைகளைக் கூறினான். எனக்கு உன்னுடைய கழல்களலல்லாது வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகலிடம் இல்லை எனவும், பெண்ணே நீ ஆடும் சுனையாயும் அணியும் சந்தனமாயும், சூடும் மலராகவும் விளங்க முடியாமல் இருக்கிறாயே எனவும், தினைப்புனத்தைக் காப்பது ஒரு சிறந்த தொழில் அல்ல என்றும் கூறி நிற்க நம்பிராசன் தன் பரிசனங்களோடு அங்கு வந்தான். வேடுவனாகத் தோன்றிய முருகப்பெருமான் மீது தோன்றிய இரக்கம் காரணமாக, வேடுவர்கள், தீயர்கள். அவ்விடத்தை விட்டு ஓடுமாறு வள்ளிநாயகியார் கூற, அவர் ஒரு விருத்தராகிய சிவனடியார் வேடம் பூண்டு வேட்டுவராசனுக்கு விபூதி கொடுத்து அருள்செய்தார். நம்பிராசன் விருத்தரென வந்தீர் வேண்டியதைக் கூறும் என

"ஆண்தொழிலின் மேதகை அண்ணலிது கேண்மோ
நீண்டதனி மூப்பகல நெஞ்ச மருள் நீங்க
ஈண்டுநும் வரைக்குமரி எய்தியினிதாட
வேண்டிவரு கின்றனன் மெலிந்துகடி தென்றான்"

–கந்தபுராணம்

தனது அருமை மகளுக்கு நல்ல துணைகிடைத்து விட்டதே என மகிழ்ந்து அவ்விடம் விட்டகன்றான் நம்பிராசன். பசியால், தாகத்தால், மோகத்தால் தவிப்பவர் போல விருத்தராகிய முருகப்பெருமான் நடித்தருள, வள்ளிநாயகி யாரும் தேனும், தினைமாவும் கொடுத்தபின் அவரை அழைத்துக் கொண்டு ஏழுமலைகளைத் தாண்டி, தாகத்தையும் நீக்கிய நிலையில் மோகத்தையும் தணிக்கும்படி கேட்ட விருத்த சன்னியாசிக்கு, சினந்து நடுநடுங்கி

"நத்துப் புரைமுடியீர் நல்லுணர்வு சற்றுமிலீர்
எத்துக்கு முத்தீர் இழிகுலத்தேன் தன்னைவெஃகிப்
பித்துக் கொண்டார்போல் பிதற்றுவீர் இவ்வேடர்
கொத்துக் கொலாமோர் கொடும்பழியைச் செய்தீரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வினாவினார் எனக் கந்தபுராணம் அழகாகக் கூறுகிறது. ஏழு பிறப்புகள் முடிய ஒருவருக்கு நல்லுணர்வு, நல்லறிவு, ஞான உணர்ச்சி என்பன ஏற்படும் என்பது அறிஞர் கருத்து. ஏழு மலைகள் தாண்டிச் சென்று விருத்த சன்னியாசிக்கு உதவியமை வள்ளிநாயகியார் ஏழு பிறப்புகளிலும் வினைகளை அனுபவித்து, கர்மத்தினால் வரும் இன்ப துன்ப நுகர்ச்சியினால் ஆணவப்பிணிப்புக் குறைகிறது. குருவருள் இன்றி ஆணவம் வலிகெடமாட்டாது. என்பதனை சூரபன்மன் வரலாறு விளக்குகிறது. ஆணவம் வலிகெடுதல் மலபரிபாகம் எனப்படும். மலம் வலிகெட சிவசக்தி ஆன்மாவிற் பதிந்து, சிவத்தோடு சேர்வதற்காக அதைச் செலுத்துகிறது. இதனை சத்திநிபாதம் என்பர். சுப்பிரமணியக் கடவுள் வள்ளிநாயகியாரைக் கவர்ந்து சென்ற பின் நாரதமுனிவரோடு சிற்றூர் சென்றார். நம்பிராசனின் உறவினர்கள் மிக மகிழ்ந்து தங்கள் தவப்பயனை எண்ணி மகிழ்ந்தனர். ஒரு சுபமுகூர்த்தத்தில் வேட்டுவராசன் சுப்பிரமணியக் கடவுள் திருக்கரத்தில் தன் புதல்வியின் திருக்கரத்தை வைத்து நம்முடைய தவப்பயனாய் வந்த குமாரியை அன்பினால் இன்று உமக்கு மணஞ்செய்து தந்தேன். ஏற்றுக்கொள்ளும் என்று தாராதத்தம் செய்தான். பார்வதி பாகராகிய பரமசிவன் உமாதேவியார் சகிதமாக, அரிபிரமேந்திராதி தேவர்களும் பிறரும் சூழ ஆகாயத்தில் எழுந்தருளி திருமணக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

இதனைத் தொடர்ந்து சுப்பிரமணியக் கடவுள் வள்ளி நாயகியாருடன் திருத்தணிகை மலை சென்று அங்கு எழுந்தருளியிருந்தார். ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய திருத்தணிகையின் சிறப்பை

"விரையி டங்கொளும் போதினுள் மிக்கபங் கயம்போல்
திரையி டங்கொளும் நதிகளிற் சிறந்தகங் கையைப்போல்
தரையி டங்கொளும் பதிகளிற் காஞ்சியந் தலம்போல்
வரையி டங்களிற் சிறந்ததித் தணிகைமால் வரையே"

எனக் கந்தபுராணம் கூறுகிறது. வள்ளிநாயகியாரது திருமணம் மூலம் சாதாரண மக்களால் ஒதுக்கப்பெற்ற வேட்டுவ குலத்தில் தோன்றிய குறமகள் பரிபக்குவ நிலையடைந்து, முன்செய் தவப்பயனால் முருகப் பெருமானை அடையும் பேறு பெற்றாள் என்ற உண்மையையும், முருகப்பெருமானே வள்ளிநாயகியாரைத் தேடி வந்து திருவருள் பாலித்தார் என்ற செய்கையையும் அறிய முடிகிறது.

□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் முத்துக்குமாரகவிராயர் நா நலம்

ஈழவள நாட்டிலே தமிழ்ப் புலமை வாய்ந்த பெரியோர்கள், கவிவாணர்கள், புலவர்கள், கலைஞர்கள் காலத்துக்குக் காலம் தோன்றி அரும்பெரும் தமிழ்பணி ஆற்றியுள்ளனர். இவர்களுடைய பணிகள் மூலம் நமது மொழியின் சிறப்பியல்புகளை விளக்கும் முறையில் இலக்கிய, இலக்கண நூல்களும் கவிதைகளும் எமக்குக் கிடைத்தன. தமிழறிஞர்கள் மட்டுமல்ல அன்னிய நாட்டவர்களும், புறசமயத்தவர்களும் நமது மொழியின் பெருமையுணர்ந்து ஆழமாகக் கற்றுச் சிறந்த பங்களிப்புச் செய்துள்ளனர். நமது வருங்கால சந்ததியினர் பரம்பரை பரம்பரையாக தமிழ் வளர்த்த சான்றோர்கள் பற்றி அறிந்திருப்பது மட்டுமல்ல தாங்களும் அவர்கள் வழிநின்று அவர்களது பணியைத் தொடரவேண்டும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் பல தமிழ் அறிஞர்கள் தோன்றி தமிழ் மொழியை வளர்க்க அரும்பாடுபட்டனர். நவீன தொழில் நுட்பவசதிகள், அச்சுயந்திரசாலைகள் போதியளவு இல்லாத ஒரு காலக் கட்டத்தில் அவர்கள் பணி போற்றுதற்குரியது. இருபாலை சேனாதிராச முதலியார், சுன்னாகம் முத்துக்குமார கவிராசர், சி. வை. தாமோதரம்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்க வர்கள் ஆவர். காசியிலிருந்து அரங்கநாதஐயர் புதல்வன் வரதபண்டிதர் அவர்கள் 17ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் வந்து சுன்னாகத்தில் குடியேறினார். அன்று முதல் அவர் ஆற்றிய தமிழ்ப்பணி சுன்னாகத்தைத் தமிழ்மொழியின் கோட்டை ஆக்கியது. மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் தமிழ்ப்புலமை உள்ளவர்களாக விளங்கியதோடு புலவர்கள், கவிராயர்கள் பரம்பரை தோன்றுவதற்கு வித்திட்டனர். கவிராஜசேகரன் என பலராலும் புகழ்ந்து போற்றப்பட்ட முத்துக்குமார கவிராசர் என்பவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் தந்தை வழிப்பேரனாவார். சிறுவயது தொடக்கம் நன்றாகச் செந்தமிழ்ப் பாடல்களைப் பாடிய காரணத்தால் எல்லோரும் இவரைக் கவிராயர் எனப் பெருமையாக அழைத்தனர். இவர் தனது கவிதா சக்தியினால் இளைஞர்கள் பலரைக் கவர்ந்து தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வமும், பற்றுமுடையவர்களாக விளங்கச் செய்தார் என்றால் மிகையில்லை. சொல்நயம், பொருள்நயம், ஓசைநயம் ஒருங்கே அமையக் கவிபாடுவதில் வல்லவர். திருக்கு, மடக்கு சிலேடைகளும் பல பிரபந்தங்களும் பாடியுள்ளார். நாமாந்தரிதை என்பது கருதிய பொருள்களை வேறு நாமங்களிலே மறைத்து வைத்துப் பாடுவது. பின்வரும் பாடலில் வேறு நாமங்களாக நின்றவை சுன்னாகம், தாவடி, கொக்குவில், கொடிகாமம், ஆனைக்கோட்டை, கட்டுடை, உடுவில், பன்னாலை, மல்லாகம், பலாலி, இளவாலை என்ற ஊர்களின் பெயர்களாகும்.

"முடிவிலாதுறை சுன்னாகத் தான்வழி
முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்
தடைய வோர்பெண் கொடிகாமத் தாளசைத்
தானைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டான்
உடுவிலான்வரப் பன்னாலை யான்மிகு
உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடைவிடாதனை யென்று பலாலிகண்
சார வந்தன ளோரிள வாலையே"

முத்துக்குமார கவிராயருக்குப் பல மாணாக்கர்கள் இருந்தனர். அவர்கள் அவரை நிழல் போலத் தொடர்ந்து கற்றனர். பல சான்றோர்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர் கவிராசர். இவரின் மாணாக்கர்களுள் மிகவும் சிறந்தவர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள். இவர் ஆங்கில மொழியைக் கற்று வித்தியா பண்டிதர் என்னும் பட்டமும் பெற்று, சென்னை மாநகரிலே அதிகாரபுருடராக பலகாலம் வாழ்ந்து வந்தார். தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களிலும், யாப்பருங்கலக்காரிகை, நன்னூல், தொல்காப்பியம் ஆகிய இலக்கண நூல்களிலும் திருக்குறள் நாலடியார் முதலிய நீதி நூல்களிலும் நிரம்பிய பயிற்சியுடையவர். சுன்னாகம் முத்துக்குமார கவிராசரைத் தமிழ்மொழிக்கு வித்தியாகுருவாகக் கொண்டவர். தான் வெளியிட்ட நூல்களின் பதிப்புரைதோறும் கவிராசருக்கு குருவணக்கம் செலுத்தியுள்ளவர். வீரசோழியப் பதிப்புரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசென் நாவினன்
முழுத்தொகை யேற்கவை யமுத்தியோன் சுன்னா
கத்துயர் மரபினோன் முத்துக்கு மார
வித்தக னடிதலை வைத்து வாழ்த் துவனே"

எனப் பாடியுள்ளமை அவருடைய குருபக்திக்கு ஓர் எடுத்துக்காட்டு. கவிராசர் தனிப்பாடல்கள் பல பாடியுள்ளார். பல ஆலயங்களுக்கு ஊஞ்சற் பாடல்களும் சனரஞ்சகமாக எல்லோரும் சுலபமாக விளங்கிக் கொள்ளத்தக்கதாக கும்மிப் பாடல்களும் பாடியுள்ளார். அவர் பாடிய பாடல்களில் நகைச்சுவை நிரம்பிய பாடல்களும், கண்டன முறையில் அமைந்த பாடல்களும் உள.

இருபாலையைச் சேர்ந்த சேனாதிராச முதலியாரும் கவிராசரும் நண்பர்கள் மட்டுமல்ல, தமிழை இருவரும் சேர்ந்து ஆராய்ந்து மகிழ்வார்கள். மேலும் இருவரும் சேர்ந்து பாடல்களைப் பாடுவது உண்டு. சேனாதிராசாவைச் சந்திக்கக் கவிராசர் நல்லூர் சென்று பின் இருவருமாக நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபட்ட பின்னர் பக்திச்சுவை நிரம்பிய செந்தமிழ்ப் பாடல்களைப் பாடுவார்கள்.

கவிராசர் அவர்கள் முத்தகச் செய்யுள் பாடுவதில் வித்தகர் என எல்லோராலும் போற்றப்பட்டார். கப்பல் ஒன்றை ஓட்டியதாகக் கற்பனை பண்ணி மக்கள் இலக்கியமாக கப்பல் பாட்டும் பாடிய பெருமை அவரை சாரும். பின்வரும் கப்பல் பாட்டு கவிராசரின் கவிபாடும் வன்மையை எடுத்துக் காட்டுகிறது.

"திங்கள் நுதலுக்கான திலக செந்தூரம்
செம்பஞ்சு திருநாத் தாசிலாப் பொடியும்
கொங்கு வங்காளத்தில் விலை நயம்பேசி
குமரவேள் கப்பல் கொண்டு வருகுது அப்பா"

ஏலேலோ ஏலேலோ.

□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபாலை முதலியாரும் சுன்னாகத்துக் கவிராயரும்

**ப**தினெட்டாம் நூற்றாண்டில், இருபாலை சேனாதிராச முதலியார், சுன்னாகம் முத்துக்குமார கவிராசர், சி. வை. தாமோதரம்பிள்ளை ஆகியோர் ஆற்றிய தமிழ், சமயப் பணிகள் என்றும் தமிழ் மக்களால் போற்றப்படவேண்டியவை. இருபாலை நெல்லைநாத முதலியார் மைந்தன் சேனாதிராச முதலியார் மரபு வழி தவறாது தமிழ் நூல்களைக் கற்பதற்கு உறுதுணையாய் விளங்கியவர் கனகசபாபதியோகி என்னும் கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளாவர். சேனாதிராச. முதலியார் அவர்கள் தமிழ்மொழியோடு வடமொழி, சிங்களம், பாளி, போர்த்துக்கேயம், ஒல்லாந்துமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளை நன்கு அறிந்தவர். சட்டத்துறையையும் பெரியவர்கள் மூலம் கற்று நியாய வாதியாகவும் விளங்கினார். முதலியார் அவர்களும் நல்லூர் கந்தப்பிள்ளை என்பவரும் சமகாலத்தில் கச்சேரியில் கடமையாற்றிய பொழுது ஏற்பட்ட தொடர்பினால் முதலியார் ஆறுமுகநாவலரின் குருவாக விளங்கும் பேறு பெற்றார். சில காலத்தின் பின் நீதிவானாகக் கடமையாற்றிய முதலியார் அவர்கள் பெரும் சிறப்புப் பெற்று நல்லூர் கந்தசுவாமி கோயிலில் கந்தபுராண பிரசங்கம் செய்து மக்களை நல்வழிப்படுத்தினார்.

முதலியார் நல்லூர் முருகன் மீது நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக்குறவஞ்சி ஆகிய நூல்களைப் பாடினார். சிலேடை வெண்பா பாடுவதில் ஆற்றலும் அனுபவமும் மிக்கவர். வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்கள், முதலியார் அவர்களையும் அவர் பாடிய பாடல்களையும் பாடியுணர்ந்து பாராட்டியுள்ளார்.

"தென்கோவை யென்னும் சீர்சால் நகர்வாழ்
மேழிக் கொடியோர் வாழ்வு பெற் றோங்க
அவதரித்திட்ட அருந்தமிழ்க் கவிஞனாம்
ஆனாவியல்பிற் சேனாதிராய
முதலியும் ....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடல் மூலம் முதலியார் பெருமையை அறிய முடிகிறது. முதலியாரின் பிறப்பிடமாகிய இருபாலையில் மட்பாண்டத் தொழில் நீண்ட காலமாக நடைபெற்றுவந்தது. மட்பாண்டங்களையும், அவற்றில் சமைக்கும் உணவையும் முருகப்பெருமானின் சக்திகளோடும், முருகப் பெருமானுக்குரிய விழாக்களோடும் தொடர்புபடுத்தி சிலேடை நயம் ததும்பும் பாடல் பின்வருமாறு.

"திருவாரும் நல்லைநகர்
செவ்வேற் பெருமானார்
இருவாலைக் குயத்தியரோ
டின்பமுற்றா ரம்மானை
இருவாலைக் குயத்தியரோ
டின்பமுற்றா ராமாயின்
தருவாரோ சட்டி குடம்
சாறு வைக்க வம்மானை
தருவார்காண் சட்டி குடம்
சாறு வைக்க வம்மானை"

பல உயர் பதவிகளை வகித்துப் புகழுடன் விளங்கிய முதலியார் அறநெறி நின்று பிறர் நலம் பேணிய பெருமைக் குரியவர். பெருநிலக்கிழராக விளங்கிய முதலியார் தன்னை நாடி வந்தவர்களுக்கு உணவு, உடை வழங்கி ஒரு பரோபகாரியாக விளங்கினார். அத்தோடு இளைஞர்களை அணைத்து தமிழ், சமயம் வளர வேண்டும் என்ற பெருநோக்குடன் இலவசமாகக் கற்பித்தார். நல்லூர் முருகன் கோயில் அறங்காவலர்க்கு ஆலோசகராக விளங்கி அரும்பணியாற்றினார். இவருடைய சமயப் பணியை சரவணமுத்தரும், ஆறுமுகநாவலரும் தொடர்ந்து ஆற்றினார்கள். நீதிபதி வைமன் கதிரவேற்பிள்ளையும் அவர் தந்தை குமாரசுவாமி முதலியாரும் முதலியவர்கள் மீது பெரு மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். 1840ம் ஆண்டு முதலியார் அவர்கள் தமிழ் மக்கள் மனம் வருந்த இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது குமாரசுவாமி முதலியார் தனது ஆற்றாமையைப் பின்வருமாறு பாடியுள்ளார்.

"நானா திராவிடமு நன்னிலக்க ணாறுறச்செய்
சேனாதிராயனேயொ செத்த தென்றீர் – வானாதி
பொன்னிலத்து முண்மை புகனூ லுரைப்ப தற்காய்
இந்நிலத்தை விட்டெழுந்த தே"

பதினெட்டாம் நூற்றாண்டில் இன்று உள்ளது போல நவீன தொழில் நுட்ப வசதிகள், அச்சுயந்திரசாலைகள், போக்குவரத்து வசதிகள், ஊடகங்கள், தபால் தந்திச் சேவை என்பன போதியளவு இல்லாத ஒரு காலக்கட்டத்தில் அவர்கள் ஆற்றிய சேவை போற்றுதற்குரியது. முதலியாரும் சுன்னாகம் முத்துக்குமார கவிராசரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் மட்டுமல்ல, நண்பர்களும் ஆவர். இருவரும் ஆலயங்களுக்குச் சென்று பக்திப் பரவசப்பட்ட நிலையில் பல பாடல்களைப் பாடியுள்ளனர். காசியிலிருந்து அரங்கநாத ஐயர் அவர்களுடைய புதல்வன் வரதபண்டிதர் யாழ்ப்பாணம் வந்து சுன்னாகத்தில் குடியேறி அரிய தமிழ்ப் பணியும் சமயப் பணியும் ஆற்றினார். பண்டிதருடைய பணிகாரணமாக சுன்னாகம் தமிழ்க் கோட்டையாக விளங்கியது. மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் தமிழ்ப்புலமை உள்ளவர்களாக விளங்கியதோடு, புலவர்கள், கவிராயர்கள் தோன்றுவதற்குப் பண்டிதர் வித்திட்டார். "கவிராஜசேகரன்" எனப் பலராலும் போற்றப்பெற்ற முத்துக்குமார கவிராசர் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் தந்தைவழிப்பேரனாவார். சிறு வயது தொடக்கம் செந்தமிழ்ப் பாடல்களைப் பாடிய காரணத்தால் எல்லோரும் இவரை கவிராசர் என அழைத்தனர். இவர் தனது கவிதா சக்தியினால் இளைஞர்கள் பலரைக் கவர்ந்து தமிழ் ஆர்வமும் சமயப் பற்றுமுடையவர்களாகச் செய்தார் என்றால் மிகையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனாதிராஜா முதலியாரும் முத்துக்குமார கவிராசரும் நண்பர்கள் மட்டுமல்ல தமிழை இருவரும் சேர்ந்து ஆராய்ந்து மகிழ்வார்கள். மேலும் இருவரும் சேர்ந்து பாடல்களைப் பாடியதும், கற்றவர்கள், கற்றோரைக் காமுறுவர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. மாவிட்டபுரம் வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த தலமென்றால் மிகையில்லை. அங்கு நடைபெறும் திருவிழாக் காலங்களில் பக்தர்கள் காவடி கொண்டு ஆடிப்பாடி வரும் காட்சி பரவசமூட்டுவதாகும். காவடியாட்டம் கண்ட அடியார்கள் இயமன் ஏறிவரும் எருமையைக் காணமாட்டார்கள் என முதலியாரும் கவிராசரும் சேர்ந்து பாடியுள்ளனர். இவர்கள் பாடிய பாடல்களில் திருவிழாவின் தர்சன பலன், சப்பரம், மஞ்சம் ஆகிய சிறந்த திருவிழாக்கள் பற்றியும் பாடியுள்ளனர். பாடல்களின் முதல் அடியை முதலியார் பாட ஏனைய அடிகளைக் கவிராசர்பாடி முடித்தவர் என கவிராசர் வரலாறு மூலம் அறியமுடிகிறது. இருவரும் பாடிய பாடல்களில் ஒன்று பின்வருமாறு.

"கோவிற் கடவை குருபரனா ருற்சவத்தைச்
சேவித்து நிற்பார் தெருத்தோறும் – காவிச்செலும்
காவடியைக் கண்டிருப்பார் காண்பரோ கூற்றுவனா
தாவடி ஏழஞ் சுமையைத் தான்"

இவ்வாறு இவர்கள் இருவரும் நட்புறவு கொண்டு இரட்டைப் புலவர்கள் போலப் பாடி மகிழ்ந்தனர்.

முதலியாரைச் சந்திப்பதற்கு கவிராசர் நல்லூர் செல்வது வழக்கம். சில சமயங்களில் இருவரும் நல்லூர்க் கோயிலுக்குச் சென்று வழிபடுவார்கள். ஒருநாள் முருகனுக்கு மிக விசேடமான கார்த்திகைத் திருவிழாவன்று இருவரும் நல்லூர்க் கோயிலுக்குச் சென்றனர். அங்கு அவர்கள் கண்ட தெய்வீகக்காட்சி அவர்களை மனமுருகி, மெய்மறந்து பாடத் தூண்டியது. அப்பொழுது கவிராசர் முதலியாரைப் பார்த்து எங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் முருகனைப் பாடுங்கள் என்பார், பின் கவிராசர் பாடுவார்.

"மங்கள நல்லை வடிவேலர் வீதிவந் தார்மடவார்
பங்கயங் காந்தள குவளை வெண் முல்லை பரப்பிமறு
கெங்கு நிறைகுடம் வைத்துமெய்த் தொண்டு செய்தாரிதற்கே
அங்க முழுதும் புனிதமி னார்க்கென் றறைந்ததுவே"

இப்பாடல் இருவர்களினது கவிபாடும் ஆற்றலை எடுத்துக் காட்டுகிறது. கவிராசர் தனது பிறந்த ஊர்மீதும், தமிழ், சமயம் மீதும் மிகுந்த பற்றும் அபிமானமும் உடையவராக இருந்தார். எமது சமயத்துக்கு அவர் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட இன்னல்களைக் கண்டு மனம் வருந்திப் பாடிய பாடல்கள் பல. நாவலருக்கு முன்னோடியாக சைவமக்களின் கலை, கலாசாரம், வாழ்க்கை முறை, சீரழிவதையும், மதமாற்றம் செய்யப்படுவதையும், பாதிரிமாரின் செயல்களையும் வன்மையாகக் கண்டித்தவர் கவிராசர். கண்டித்ததோடு நிற்கவில்லை. பல பாடல்களையும் பாடியுள்ளார். சைவத் திருக்கோயில்களில் நடைபெறும் பல சமய நிகழ்ச்சிகளைக் குறைகூறியதைக் கேட்டு மனம் பொறுக்க முடியாத நிலையில் கவிராயர் பாடிய பாடல் பின்வருமாறு.

"மேலான கோயிற் பிரதிட்டை யேனென்று
வீண்படி சொல்வார் சலொமோ னெனும் வேந்தன்
ஆலயங் கட்டிப் பிரதிட்டை செய்த
தறிகில ரோவெடி ஞானப் பெண்ணே"

கவிராசர் பாடிய ஒரு தொகுதிப் பாடல்களில் ஈற்றடியாக

"அமல பூரண சுத்த சச்சிதானந்த மயமாம் சிவனை அறிவதறிவே" எனப் பாடியுள்ளார். மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவ பாதிரியார் செய்த செயலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம்
நாளுநா ளுந்தருகுவோம்
நாஞ்சொல் வதைக்கேளும் எனமருட்டிச் சேர்த்து
நானமுஞ் செய்து விட்டார்.

எனப்பாடி சிவனிடம் உள்ளமுருக முறையிட்டுள்ளார். முதலியாரும் கவிராசரும் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. அவர்களின் முயற்சியால் தமிழ், சமயம், கலாசாரம் என்பன பேணிப் பாதுகாக்கப்பட்டு, பிற்காலச் சந்ததியினருக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

## கூட்டு வழிபாடு

ஒரு தனி இழையை எளிதில் அறுத்து விடலாம். பல இழைகள் ஒன்றுபட்டுத் திரித்த கயிறு (வடம்) தேரை இழுத்துவிடும். அதுபோல பல அன்பர்கள் வாரத்திற்கொரு நாள் கோயிலில் ஒன்றுபட்டுக் கூட்டு வழிபாடு செய்தால் திருவருளை ஈர்த்து விடலாம். முஸ்லீம் அன்பர்கள் தினம் ஒன்றுக்கு ஐந்து வேளை தவறாமல் தொழுவதும், கிறிஸ்தவ அன்பர்கள் ஞாயிறு தோறும், ஆண், பெண் அடங்கலும், தங்கள் தேவாலயத்திற்குச் சென்று நியதியாகத் தொழுவதும் போல் இந்துக்களாகிய நாமும் குறிப்பிட்ட நாட்களில் ஆங்காங்கு உள்ள ஆலயங்களில் நியதியாக வழிபடுவது மிகமிக அவசியமாகும். அண்ணல் காந்தியடிகள் இறுதியாகப் பிரார்த்தனைக் கூட்டம் நாள்தோறும் நடாத்தி முடிவில் பிரார்த்தனைக் கூட்டத்திலே ஆத்மா சாந்தி அடைந்தார். ஆதலால் அன்பர்கள் காதலாகிக் கசிந்து கடவுளை வழிபட்டு இகபர நலன்களை எளிதில் பெறுதல் வேண்டும். இறைவழிபாடு செய்து பிறவிப் பிணியை ஒழித்துப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறவேண்டும்.

– வாரியார் விருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிவையர்களுக்கு ஓர் அறிவியற் கூடம்

"ஏந்த ஒரு கல்விமுறையும் நல்ல பயனை அளிக்க வேண்டுமானால் அது மனிதனது தேவைகளுக்கேற்பவும், அவனுடைய தன்மைக்கேற்பவும், உருவாக்கப்படவேண்டும். கல்வி மனிதனுடைய ஆத்மீக வளர்ச்சிக்கும் நல்லொழுக் கத்திற்கும் வழிவகுப்பதாக இருக்கவேண்டும். கல்வியினால் மனிதனிடம் அன்பு, கருணை, உண்மை, வாய்மை, நேர்மை, நடுவுநிலைமை போன்ற அரிய பண்புகள் உருவாகவேண்டும். கல்வியினுடைய உண்மையான நோக்கம் தனிமனிதனுடைய அல்லது நாட்டினுடைய பொருட் செல்வத்தைப் பெருக்குவதல்ல. கல்வி மக்களுடைய ஆன்ம ஈடேற்றத்திற்கும் வாழ்க்கைநெறிக்கும் வழிவகுப்பதாக அமைவதவசியம்." என்று கூறிய சேர். பொன். இராமநாதன் கல்வி பற்றிய தனது உயர் நோக்கங்களுக்கமைய ஆண்களுக்கு பரமேஸ்வராக் கல்லூரியையும், பெண்களுக்கு இராமநாதன் கல்லூரியையும் ஸ்தாபித்தார்.

வடமாகாணத்தில் கல்வியறிவுடைய பெண்களின் தொகை 1911ம் ஆண்டில்கிடைத்த புள்ளிவிபரங்களின் பிரகாரம் 12.2 வீதம். இந்நிலையைக் கண்டு சேர். பொன். இராமநாதன் மிக வருந்தினார். வேதகாலம் தொடக்கம் சிறப்பாக வாழ்ந்த பெண்கள் கல்வியறிவற்றவர்களாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும். ஒரு ஆண் மகனுக்குக் கல்வி புகட்டும் போது தனி ஒருவனுக்குக் கல்வி புகட்டுகிறோம். ஆனால் ஒரு பெண்ணுக்குக் கற்பிக்கும் போது ஒரு குடும்பமே கல்வி பெறுகிறது என்பது அவர் கருத்தாகும். நல்ல அறிவும், ஒழுக்கமும், சமயப் பற்றும் கலாச்சாரப் பின்னணியுமுள்ள ஒரு பெண் நாட்டிற்கு நற்பிரசையாவாள். பெண்கள் மொழிப்பற்றுடையவர்களாக சமய கலாச்சாரத்தைக் கடைப்பிடிப்பவர்களாக, பாரம்பரியமான பண்பாட்டைப் பேணுபவர்களாக, நற்பண்புகளுடையவர்களாக இருக்க வேண்டுமானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கேற்ற சூழ்நிலையை உண்டாக்கிக் கல்வியைப் புகட்டவேண்டும். சைவப்பெண்கள் சைவசமயச் சூழ்நிலையில் உயர் இலட்சியங்களை மனதிற்கொண்டு வாழவேண்டும் என்று விரும்பி சுன்னாகத்தில் இராமநாதன் கல்லூரியை ஸ்தாபித்தார்.

இராமநாதன் கல்லூரி 250 விடுதி மாணவிகளும், 50 வெளிமாணவிகளும் திறம்படக் கற்கத்தக்க முறையில் அமைக்கப்பட்டு 1913 ம் ஆண்டு ஆரம்பமானது. பண்டைக் காலத்தில் இருந்தது போல குருகுல அல்லது குருசிஷ்ய முறையில் கற்று, பண்புள்ள ஆசிரியர்களுடன் நெருங்கிப் பழகுவதால் அதிக நன்மை ஏற்படும் எனத் தாபகர் கருதினார். இறைவழிபாட்டிற்கும், சமய போதனைக்கும், இசைக்கும் அங்கு மிக முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. கல்லூரியில் அமைந்துள்ள ஆலயத்தில் காலை, மாலை இரு காலப் பூசைகள் முறையாக நடைபெற்றமையால் விடுதி மாணவிகள் கிரமம் தவறாது ஆலயத்தொண்டில் ஈடுபட்டனர். நடை, உடை, பாவனை என்பவற்றில் மாணவிகள் தமிழ்ப் பண்பாட்டைப் பின்பற்றினர். சேர். பொன். இராமநாதனுடைய இல்லம் கல்லூரிக்கு மிக அருகிலே அமைந்திருந்தது. எனவே ஆலய வழிபாடு, ஆலயத்தொண்டு, திருமுறைகளை ஓதுதல் ஆகியவற்றை மாணவிகள் முறையாக மேற்கொள்ளத் தாபகர் பல ஆலோசனைகளை வழங்கியதோடு, தானும் ஆலயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி மாணவிகளுக்கு முன்மாதிரியாக விளங்கினார். சேர். பொன். இராமநாதன் அவர்களால் கல்லூரி மண்டபத்தில் வாரந்தோறும் நடத்தப்பட்ட சைவசித்தாந்த வகுப்புகள் சமய உணர்வையும் மக்களிடத்தே விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தின. இராமநாதன் கல்லூரி மாணவிகள் ஆலயத்தில் ஓதுவதற்கு ஏற்ற திருமுறைகளைத் தொகுத்து அவற்றை அவர்கள் பண்ணோடு பாடுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இராமநாதன் கல்லூரி ஒரு சிறந்த கலைக்கூடம் என்பதை யாவரும் அறிவர். தமிழ் மக்கள் பேணி வளர்த்த அருங்கலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் இங்கு முதன்மை பெற்றன. அன்று தொடக்கம் இன்றுவரை கல்லூரியில் எழுந்தருளியிருக்கும் நடராஜப் பெருமானின் அருளாட்சியினால் கலைத்துறையில் இராமநாதன் கல்லூரி தனி இடத்தை வகித்து வந்துள்ளது. அங்கு அமைந்துள்ள இராமநாதேஸ்வர ஆலயம் கட்டடக் கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் சிறப்பை எடுத்துக்காட்டும் அழியாச் சின்னமாக விளங்குகிறது. கலைகள் மக்கள் மனதைப் பண்படுத்தி, அழகுணர்வை ஏற்படுத்தி மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்குக் காரணமாக அமைகின்றது என்பதை உணர்ந்த சேர். பொன். இராமநாதன் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்ததில் வியப்பில்லை.

சைவப்பெண்கள் வாழ்விலே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும், உலகின் பல பாகங்களிலும் வாழும் சைவப் பெண்களுடன் இணைந்து செயற்படவும் சைவ மங்கையர் சபை என்ற தாபனத்தை, 1924ம் ஆண்டு அமைத்தார். சேர். பொன். இராமநாதனுக்கு உறுதுணையாக இருந்து அவருடைய பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு தமிழும் சைவமும் வளர அரும்பணியாற்றிய பெருமை லேடி லீலாவதி இராமநாதன் அவர்களைச் சாரும். இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவர்களும், சைவ மங்கையர் சபை அங்கத்தவர்களும், சைவ அபிமானிகளும் லேடி இராமநாதன் அம்மையார் ஞாபகார்த்தப் பேருரைகள் வருடம் தோறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெறுபவர்களுக்கும் தொடர்ந்து கலாநிதிப் பட்டக் கல்வியை மேற்கொள்பவர்களுக்கும் லேடி இராமநாதன் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது.

இராமநாதன் கல்லூரிக்கு வருகை தந்த மகாத்மாகாந்தி, சேர். சி.பி. இராமசாமி ஐயர், நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, முன்னாள் இலங்கையின் மகாதேசாதிபதி சேர். றொபேட் சாமோன் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர். பொன். இராமநாதன் அவர்களின் உயர் இலட்சியங்களுக் கேற்ப கல்லூரி செயற்படுவதைக் கண்டு மகிழ்ந்து பாராட்டியுள்ளனர். "சேர். பொன். இராமநாதனின் கொடைத் திறனின் அழியாச் சின்னமாக விளங்கும் இக்கல்லூரியை நான் வந்து பார்வையிடாவிட்டால் நான் என்றென்றும் கவலைப்பட்டிருப்பேன். இங்கு ஒரு அழகிய கோயில் இருப்பது மிகவும் பொருத்தமானது" என்று 1927ம் ஆண்டு இராமநாதன் கல்லூரிக்கு விஜயம் செய்த மகாத்மாகாந்தியடிகள் கூறியுள்ளது ஈண்டு சிந்திக்கத்தக்கது.

சேர். பொன். இராமநாதனின் இலட்சியங்களை நிறைவேற்றுவது சைவப் பெண்களுடைய தலையாய கடமையாகும். பெருகிவரும் மாணவிகள் தொகை, பரம்பரை இடைவெளி, மாணவிகளுடைய மனப்பாங்கு, பெற்றோருடைய எதிர்பார்ப்பு, கொள்கை வேறுபாடுகள், மேலைநாட்டு நாகரிகத்தின் தாக்கம், பொருளாதாரப் பிரச்சினைகள் என்பன, தாபகரின் இலட்சியத்திற்குத் தற்பொழுது தடைகளை ஏற்படுத்துகின்றன.

அளப்பரும் பணிகள் ஆற்றி அமரத்துவம் அடைந்த இப்பெரியாருக்கு தமிழ் மக்கள், என்றும் நன்றியும் கடப்பாடும் உடையவர்களாக இருக்கவேண்டும். அன்னாருடைய கோட்பாடுகளை கடைப்பிடித்து, நற்பண்புகள் ஒருங்கே அமைந்த உத்தம பெண்களாக வாழ்ந்து, நன்மக்களை உருவாக்கி, அன்பும் அமைதியும் உள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே நாம் சேர். பொன். இராமநாதனுக்குச் செய்யும் கைமாறாகும்.

**"திருவிளங்கு செழுந்தமிழும், தேமொழியும் ஆங்கிலமும் சிறக்க ஈழ**
**மருவிளங்கு மைந்தர்களும் மகளிரும் கற்று ஒழுகி வர மெஞ்ஞான**
**பொருள் விளங்கு சிவநெறியும் பூதலத்தில் இலங்க வந்த பூமான் சைவத்து**
**அருள் விளங்கு யோகி பொன்னம்பல இராமநாததுரை அடிகள் போற்றி"**

□□

**(சேர். பொன். இராமநாதன் குருபூசையை ஒட்டி**
**இக்கட்டுரை வெளியாகியது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவப் பெண் இந்திராகாந்தி

இரவீந்திரநாத் தாகூரிடம் அறிவு வளர்ச்சியும், மகாத்மாகாந்தியிடம் அரசியல் அனுபவமும் பெற்ற இந்திராகாந்தி, மிகப் பெரிய ஜனநாயக நாடான பாரதத்தின் ஒப்பற்ற தலைவியாக விளங்கினார். இந்தியப் பிரதமராக அவர் விளங்கிய காலக்கட்டத்தில், நாடு அரசியல், பொருளாதாரம், சமூகம், கலை கலாசாரத்துறைகளில் ஒரு புதிய திருப்பத்தைக் காண முடிந்தது. இனத்தால், மதத்தால், மொழியால் வேறுபட்ட இந்திய மக்களிடையே ஒருமைப் பாட்டை ஏற்படுத்துவதில் இந்திரா பெருவெற்றி கண்டார். ஆழமான அரசியல் ஞானம், உறுதியான கொள்கை, அஞ்சா நெஞ்சம், பயன் கருதாப்பணி, பிரச்சினைகளை அணுகும் ஆற்றல், அவற்றைத் தீர்க்கும் செயற்திறன், சாதுர்யமான பேச்சு... என்பன அவர் வெற்றிக்கு வழிவகுத்தன.

"சொல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்
வெல்லல் யார்க்கும் அரிது"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்த பெருமை அவருக்குரியது. சர்வதேச மகாநாடுகளிலும், அரசியல் அரங்குகளிலும் இந்திராகாந்தி முதன்மை பெற்றார். உலகின் தலைசிறந்த தலைவர்கள் அவருடைய ஆணித்தரமான கருத்துக்களையும், உறுதியான திட்டங்களையும் விரும்பி வரவேற்றனர். எண்ணிய எண்ணத்திற்கொண்ட உறுதி அவர் வெற்றிக்குக் காரணமாயமைந்தது. கொள்கையளவில் மாறுபாடு கொண்டவர்களையும் தன்வசப்படுத்துவதில் இந்திரா வெற்றி கண்டார்.

இந்தியாவின் ஈடு இணையற்ற தலைவி இந்திராகாந்தி காட்சிக்கு எளியவர் என்பதை நேரில் காணும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. ஏழைகளின் துயர் துடைப்பதில் அவர் காட்டிய அக்கறை அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். போரிலே கணவனை இழந்த ஒரு ஏழைப்பெண் தனது சிறு குழந்தைகளுடன் டில்லி சென்று இந்திராகாந்தியை நேரடியாகக் கண்டு, தனது இன்னல்களைத் தீர்க்கத்தக்க நிலை ஒரு நாட்டிலே இருக்குமானால், அங்கு நல்லாட்சி நிலவுகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இந்திராகாந்தி எட்டு வயதுச் சிறுமியாக இருக்கும் பொழுது தான் பிரான்சின் வீரப்பெண்ணான ஜோன் ஒப் ஆக்போல் வாழவேண்டும் என்ற விருப்பம் நிறைவேறியது. தன்னலம் கருதாது பணியாற்றும் பெண்களை நாம் தாய் என்ற நிலையில் வைத்துப் போற்றுகிறோம். ஒரு பெண்ணுக்கமைய வேண்டிய உயர் பண்புகளை தாயிடம் தான் காணமுடியும். பெண்ணுக்குப் பெருமை கொடுத்த பாரதநாட்டின் காவியத் தலைவியாக விளங்கிய அன்னை இந்திராகாந்தியின் மகத்தான சகாப்தம் துயரில் முடிவுற்றதெனினும் அவருடைய இலட்சியங்கள் என்றும் நிலைத்து நிற்கும். □□



மில்க்வைற் அதிபர்
அமரர்
கலாநிதி க. கனகராசா
அவர்களால்
கௌரவிக்கப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்ந்தவரைக் காக்கும் சனிபகவான்

புரட்டாதி மாதத்தில் புரட்டாதிச் சனிக்கிழமை விரதமும், நவராத்திரி விரதமும் மிகக் கூடுதலான சைவ மக்களால் பக்தியோடும் சிரத்தையுடனும் கைக்கொள்ளப் படும் விரதங்களாகும். புரட்டாதிச் சனிக்கிழமை வார விரதங்களில் ஒன்றாக விளங்குகிறது. நவக்கிரகங்கள் தங்கள் சக்தியினால் மக்களுடைய வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. அவற்றின் சுழற்சியினால் நன்மையான பலன்களும் துன்பகரமான பலன்களும் ஏற்படுகின்றன. கிரகங்கள் எல்லாம் தங்களுக்கு வெவ்வேறு தெய்வங்களை அதிதேவதைகளாகக் கொண்டுள்ளன. ஒரு கிரகம் ஒருவருக்குத் துன்பத்தை ஏற்படுத்தினால் அதற்குரிய அதிதேவதைகளை வணங்கி நிவர்த்தி பெறலாம். எனவே சிவாலயங்களிலும், விஷ்ணு கோயில்களிலும் நவக்கிரக சந்நிதிகள் இருப்பதைக் காணலாம். நமது நாட்டிலே நவக்கிரகங்களுக்குத் தனித்தனிக் கோயில்கள் கிடையாது. ஆனால் பாரதநாட்டிலே கும்பகோணத்துக்கு அருகிலே மிக மகிமை வாய்ந்த சூரியனார் கோயில் இருக்கிறது. இங்கு சூரிய பகவான் மையமாக அமைய ஏனைய கிரகங்கள் சூரிய பகவானைச் சுற்றி உரிய இடங்களில் இருக்கின்றன.

ஈஸ்வரன் என்ற சிறப்புக்குரியவர் சனிபகவான். அசுபக் கிரகங்களில் ஒன்றாக இருந்தாலும் பக்தியினாலும், விடாமுயற்சியினாலும் காசியில் ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்துக் கடும் தவம் செய்து, சிவபெருமானிடம் நவக்கிரகங்களில் ஒன்றாக இருக்கும் பேறும் ஈஸ்வரன் என்ற பெயரும் பெற்று மகிழ்ந்தார். சனீஸ்வரன் நவக்கிரக சந்நிதிகளிலும், சிவன் கோயில்களில் தனியாக ஒரு சந்நிதியிலும் எழுந்தருளியிருப்பார். சாதாரணமாக மக்கள் அட்டமத்தில் சனீஸ்வரன் சஞ்சாரம் செய்யும் பொழுதும், ஏழரைச்சனி நடைபெறுங்காலத்திலும், சனிமகாதிசை இடம்பெறும் பொழுதும் மனங்கலங்கி தங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடக்குமோ தெரியாது? என அஞ்சுகின்றனர். உலக வழக்கிலே சனியைப் போல கொடுப்பாருமில்லை, கெடுப்பாருமில்லை எனக் கூறப்படுவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆகவே கிரகங்களுக்குரிய அதிதேவதைகளை வணங்குவதாலும், விரதங்களை அனுஷ்டிப்பதனாலும் தான தர்மங்கள் செய்வதன் மூலமும் பரிகாரம் தேடிக்கொள்ளலாம்.

சனிபகவான் கரிய நிறமுடையவர், கால் முடமானவர், பல நற்குணங்கள் அமைந்த காகத்தை வாகனமாக உடையவர். சனீஸ்வரன் தனக்குச் சொந்தமான மகர, கும்ப ராசிகளில் பிரவேசிக்கும் பொழுதும் உச்சமாகிய துலாராசியில் பிரவேசிக்கும் பொழுதும் விசேட வழிபாடு செய்வதன் மூலம் நீண்ட ஆயுள், சுகவாழ்வு, வலிமை, இன்பம், புகழ், நல்ல ஆரோக்கியம் என்பவற்றைப் பெறலாம்.

சனிபகவானால் துன்பப்பட்டவர்கள், காடேகி வாழ்ந்தவர்கள், பொன் பொருள் செல்வமெல்லாம் இழந்து வருந்தியவர்கள் பற்றியும் இலக்கியங்கள் கூறுகின்றன. திரௌபதையின் துகில் உரியப்பட்டதும், சீதை இராவணனால் கவரப்பட்டதும், பாண்டவர்கள் வனவாசம் செய்ய நேர்ந்ததும், சனிபகவான் பொருத்தமற்ற ராசிகளில் சஞ்சாரம் செய்த காலத்தில் என்றால் மிகையில்லை. தலயாத்திரை, தீர்த்தயாத்திரை செய்வதன் மூலமும், சனீஸ்வரபகவானுக்கு விசேட வழிபாடு புரட்டாதியின் சனிக்கிழமைகளில் செய்வதன் மூலமும் தோஷ நிவர்த்தி பெறமுடியும். பொதுவாக எல்லா விரதங்களுக்கும் சொல்லப்பட்ட நியதிகள் இவ்விரதத்துக்கும் உண்டு. ஆனால் நல்லெண்ணெய் வைத்து நீராடி விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென்பது புரட்டாதிச் சனிக்கிழமை விரதத்துக்கு ஒரு நியதியாகும். ஆசாரசீலர்களாக கருநீலப் புஷ்பங்களைச் சாத்தி, திலதீபமேற்றி, திலஅன்னம் (எள்சாதம்) நிவேதித்து, கருநீல ஆடைகளால் சனி பகவானை அலங்காரம் செய்து வழிபடுவது மிகவும் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிடதநாட்டு மன்னன் நளமகாராசன் ஒரு தினம் அந்திப்பொழுதில் சந்தியாவந்தனம் செய்வதற்கு கைகால் சுத்தம் செய்யும் பொழுது குதிக்காலில் ஒரு பகுதி நனையாதிருந்த காரணத்தால் ஆசாரம் குறைந்துவிட்டது எனக் கருதி சனீஸ்வரன் நளனுக்குப் பல துன்பங்களைக் கொடுத்தான். புட்கரனோடு சூதாட வைத்து நாடிழந்து, காரிகை தமயந்தியைக் கானகத்தில் கைவிட்டு, கார்க்கோடகன் என்ற பாம்பால் கடியுண்டு தோற்றம் மாறி, இருதுபர்ண மகாராஜனுக்கு குதிரைச் சேவகனாய் அமர்ந்து மிகவும் துன்பப்பட்டான். தமயந்தியும் கணவனைப் பிரிந்து தன்னை விழுங்க முயன்ற மலைப்பாம்பின் பிடியிலிருந்து தப்பி, சிலர் உதவியுடன் சுவாகுகன் நகரம் சென்றடைந்தாள். நளனைக் காணும் வரை கூந்தலை முடியாது, நீராடாது, ஆடை மாற்றாது, பூச்சூடாது, மஞ்சள் குங்குமம் தரியாது, சோகமே உருவாக உறுதியுடன் வாழ்ந்தாள். இறுதியாக விதர்ப்பநாட்டு மன்னன் மேற்கொண்ட பெருமுயற்சியால் தமயந்தி கணவனையும் பிள்ளைகளையும் மீண்டும் அடைந்தாள். தான் பழமை போல நளன் ஆட்சி செய்து வாழ்ந்தான். சனீஸ்வரனுடைய தாக்கத்திற்கு உள்ளான நளமகாராஜன் சித்தப்பிரமை பிடித்தவன் போல மனைவி மக்களை வெறுத்து சோம்பலுற்று மனமகிழ்ச்சியின்றிக் காணப்பட்டான். நாரதமுனிவர் நளனிடம் வந்து இது சனிபகவான் செயலே தலயாத்திரை, தீர்த்தயாத்திரை செய்தால் மட்டும் நற்பலன் கிடைக்கும் எனக் கூறி நல்ல ஆலோசனைகளையும் வழங்கினார்.

நளமகாராஜன் மனைவி மக்களுடன் பல தலங்களையும் வழிபட்டு வரும்பொழுது பரத்துவாச முனிவரைச் சந்திக்க நேர்ந்தது. முனிவர் நளனது நிலையையுணர்ந்து தர்ப்பாரண்ணேஸ்வரம் எனப்படும், திருநள்ளாறு சென்று தீர்த்தமாடி வழிபாடு செய்தால் உன் குறை எல்லாம் தீரும் எனக் கூறிவிடை பெற்றுச் சென்றார். நளமகாராஜா திருநள்ளாறு சென்று புனிதமான பிரதமதீர்த்தத்தில் நீராடி கோபுரவாயிற் புகும்போது சனிபகவான் சிவனுக்கஞ்சி நளனை விட்டகன்று அருகில் உள்ள ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடப்பிறையில் அமர்ந்தான். நளன் மனம் மிக மகிழ்ந்து தர்ப்பாரண்ணேஸ்வரப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை செய்வித்து, அருந்தமிழ்ப் பாமாலைகள் பாடி வணங்க இறைவன் நளன் முன்காட்சியளித்து அவன் விரும்பிய வரங்களை அருளி மறைந்தான். அன்று முதல் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றுக்கும் நளனுடைய நாமம் சூட்டப்பெற்றது. திருநள்ளாறு செல்லும் அடியவர்கள் சனீஸ்வர பகவானுடைய கெட்ட பார்வையினின்று நீங்கி, இன்பமடைவர் என்பது திண்ணம், இன்றும் அடியவர்கள் சனிக்கிழமைகளில் "சனி நீராடு" என்ற வாக்கியத்திற்கு ஏற்ப நல்லெண்ணெய் தேய்த்து நீராடி எள்தீபம் ஏற்றி வணங்குவதைக் காணலாம்.

மேலும் சிவபெருமான் சனிபகவானை உள்ளே அழைக்க சனீஸ்வரன் வந்து அஞ்சிநின்று வணங்க" நளனோடு வந்தனையோ உன் பொருட்டு நளன் அநேக வரங்களைப் பெற்றான். அதன்படி இத்தலத்தில் இருந்து வருகின்றவர்கட்கு யாதொரு இடுக்கண்ணும் செய்யாது அருள்புரிந்துகொண்டு இருப்பாய்" என அருள்பாலித்தார். சனிபகவானும் இறைவனுடைய ஆக்ஞையை சிரமேற்கொண்டு முன்பு போல அம்மாடப்பிறையில் காகவாகனத்தமர்ந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றனன். சனிபகவான் தேவாதி தேவர் தொழும் தெய்வமாக, சார்ந்தாரை எப்பொழுதும் காப்பவனாக, புண்ணியங்கள் தழைத்தோங்கச் செய்பவனாக, வல்வினைகள் வராமல் காப்பவனாக விளங்கி மறவாதவர் மனத்திலே எழுந்தருளி, அடியார்களை என்றும் காத்தருளி, உலகமெல்லாம் செழித்தோங்கச் செய்துவரும் ஒருவராக விளங்குவதைக் காணலாம்.

□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்திற்கு புத்துயிரூட்டிய திருமுறைகள்

திருமுறைகள் இறைவன் உள்நின்று உணர்த்தப்பாடப் பெற்றவையாகும். நம் உணர்வு சிறிதும் இன்றி இறைவனை இடையறாது நினைந்து பற்றற்ற நிலையில் பரமனடியை வணங்கிப் பாடப் பெற்றவை திருமுறைகள். அப்பர், சுந்தரர், சம்பந்தர் மூலம் சிவபெருமான் வெளிப்படுத்திய சிறப்புக்குரியன சைவத் திருமுறைகளாகும். "எனதுரை தனதுரையாக" எனத் திருஞான சம்பந்தமூர்த்திநாயனாரும், "பன்னிய செந்தமிழ் மாலை பாடுவித்தேன். சிந்தை மயக்கறுத்த திருவருளினானை" எனத் திருநாவுக்கரசரும் கூறுவதிலிருந்து திருமுறைகள் தெய்வத் தன்மை உடையன என்பது தெளிவாகிறது.

நம்பியாரூரருக்கு "பித்தா" எனவும், தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் எனவும் சேக்கிழார்நாயனாருக்கு "உலகெல்லாம்" எனவும் அடியெடுத்துக் கொடுத்து அருள் புரிந்த நிகழ்ச்சி ஆழமாகச் சிந்திக்க வேண்டியது மட்டுமல்ல. இறைவனுடன் உரையாடி உறவாடிய நிலையில் பாடப்பெற்றவை என்பது தெளிவு. இறைவன் அருளிய மறைகளாகவே திருமுறைகளைப் போற்றிப் பாடுதல் வேண்டும் என்பது முன்னோர் துணிபு. பதினொராந் திருமுறையில் உள்ள திருமுகப் பாசுரம் மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானாலேயே திருவாய் மலர்ந்தருளப் பெற்றது. வேதசிவாகமங்களைப் போன்று இறைவன் அருளிய மறைகளாகவே திருமுறைகளைக் கருதவேண்டும்.

சோழர்கள் ஆட்சிக்காலத்தில் முதலாவது இராஜராஜன் காலம் தொடக்கம் ஆலயங்களிலே திருமுறைகள் முறையாக ஓத நடவடிக்கை எடுக்கப்பட்டது. தஞ்சைப் பெரிய கோயிலில் நாடோறும் திருமுறைகளை ஓதுவதற்கு பிடாரர்கள். (ஓதுவார்கள்) நாற்பத்தெண்மர், உடுக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்க ஒருவர், மத்தளம் முழக்க ஒருவர் நியமிக்கப்பட்டனர். இந்த ஓதுவார்களுக்கு நிவந்தம் வழங்கி மன்னன் ஊக்குவித்த செயல் போற்றப்பட வேண்டியது மட்டுமல்ல பின்பற்றப்பட வேண்டியதாகும். திருக் கோயில்களில் திருக்கைக் கோட்டி என்ற மண்டபத்தில் திருமுறைகள் வைத்துப் பூசிக்கப்பெற்றன. நாகபட்டினத் திலுள்ள திருக்காறாயில் என்ற தலத்தில் ஓதுவார்களுக்கு உணவளிக்க இறையிலி நிலம் விடப்பட்டது எனக் கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. இராஜராஜசோழன், கங்கை கொண்ட சோழன் முதலிய பெருவேந்தர்கள் திருமுறைகளை ஓதி நாடோறும் வழிபட்டு ஆட்சி புரிந்தனர். அக்காலத்தில் திருமுறைகளை இறைவனாகவே கருதி வழிபடும் முறை நிலைத்திருந்தது. சிவபூசை, அடியார் பூசை, குருபூசை ஆகிய வழிபாடுகளுக்கு எவ்வளவு சிறப்பும் பயனும் உண்டோ அத்துணை சிறப்பும் பயனும் திருமுறை வழிபாட்டிற்கும் பாராயணத்துக்கும் உண்டு.

நம் நாட்டிலே ஆலயங்களிலே, கொடியேற்றம், கொடியிறக்கம் ஆகிய தினங்களிலே நவசந்நிதிகளிலும் வசந்த மண்டபப் பூசையின் பின்னும் திருமுறைகள் ஓதப்பெறுவது வழக்கம்.

திருமுறைகளைத் தொகுத்தருள நம்பியாண்டார் நம்பிக்கு கலைஞானத்தை உணர்த்தியதுடன், அவை சிதம்பரத்திலே ஓர் அறையிலே இருப்பதாக திருவாய் மலர்ந்தருளித் திருமுறைகளை உலகறிய அருள்பாலித்தவர் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார்.

ஆலயங்களிலே தெய்வீகமான திருமுறைகள் நன்றாகப் பாடத் தெரிந்தவர்களால் ஓதப்படவேண்டும். பாரத நாட்டிலே ஆலயங்களிலேயும், ஆதீனங்களிலும், சிவப்பொலிவுடன் ஓதுவார்கள் திருமுறைகளை ஓதக் காதாரக் கேட்டு, மகிழ்ந்தேன். திருவல்லிக் கேணியில் மிக அண்மையில் நடைபெற்ற திருமுறை விழாவில் பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றும் சந்தர்ப்பம் அடியேனுக்குக் கிடைத்தது. அங்கு ஓதுவார்களும் மற்றும் சொற்பொழிவாற்றிய பெரியோர்களும், மூன்று நாட்களாக உணவு, இருப்பிடவசதி எல்லாம் செய்து கொடுத்ததோடு பண்பாகவும், கௌரவமாகவும் ஆதரிக்கப் பெற்றனர். மேலும் ஓதுவார்களுக்கு உருத்திராக்க மாலை, தாளம், வஸ்திரம் எல்லாம் கொடுத்துத் கௌரவித்தனர். ஓதுவார்கள் பாட ஆரம்பிக்க மேடையில் அமரும் பொழுது பலர் அவர்களுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கியதைக் கண்டு வியந்தேன்.

ஆலயங்களிலே கும்பாபிஷேக தினத்தன்று கர்ப்பக்கிரகக் கதவு திருமுறை பாடித் திறக்கும் ஒரு நிகழ்ச்சி இடம்பெறுகிறது. திருமறைக் காட்டுக்கு அப்பரும் சம்பந்தரும் சென்ற பொழுது அங்கு வேதங்களால் அடைக்கப்பெற்ற கதவு நீண்ட நாட்களாக வேதங்களில் வல்லவர் ஒருவர் வராமையால் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு மனம் வருந்தினார். எனவே நாம் மறைக்காட்டு இறைவனை நேர்முகமான திருவாயில் வழியே சென்று வணங்க வேண்டும். ஆகவே கதவு திறக்கப்பாடும் எனச் சம்பந்தர் அப்பரை வேண்டினார். அன்புடைய சம்பந்தருடைய விருப்பத்துக்கிசைய "பண்ணினேர் மொழியாளுமை பங்கரே" என ஆரம்பித்து முதலாவது பாடலைப்பாடி முடித்தார். கதவு திறக்கவில்லை. தொடர்ந்து பத்தாவது பாடலைப் பாடியபொழுதும் கதவு திறக்கப் படவில்லை. காலம் தாழ்ந்ததால் கவலையுற்ற அப்பர் சுவாமிகள் உரிமையுடன்

"அரக்கனை விரலால் அடர்த் திட்ட நீர்
இரக்க மொன்றிலீர் எம் பெருமானீரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சாக்க விக்கதவந் திறப்பிம்மினே"

என்ற பதினொராவது பாடலைப் பாடியதும் இறைவனருளால் திருக்கதவு திறக்கப் பெற்றது. அப்பரும் சம்பந்தரும் உள்ளே சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்காட்டீசரை வணங்கி மகிழ்ந்தனர். தொடர்ந்து கதவு அடைக்கும்படி சம்பந்தர் "சதுரம் மறை" என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினார். எனவே வேதங்களால் அடைக்கப்பெற்ற கதவு செந்தமிழ்த் திருமுறையால் திறக்கப்பெற்றதென்றால் திருமுறைகள் வேதங்களுக்கு நிகரானவை என்பது தெளிவு. ஆலயங்களிலே கும்பாபிஷேக தினங்களிலே பதினொராவது பாடலைப் பாடிய பின்னர் தான் கதவு திறக்கப்படவேண்டும். அதற்கு முன் திறப்பது திருமுறைகளுக்கு விரோதமான செயல் எனக் கருதப்படவேண்டும்.

இந் நிகழ்ச்சிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழராய்ச்சித்துறை விரிவுரையாளர் வித்துவான். க. வெள்ளைவாரணன் பின்வருமாறு விளக்கம் தந்துள்ளார். செந்தமிழ்ப்பாடல்களாகிய திருமுறைகளையும், அவற்றின் சுவை நலங்களையும் துய்க்க விரும்பிய மறைக்காட்டீசர். திருக்கதவு திருக்காப்பு நீக்கக் காலம் தாழ்த்தினார்.

அப்பரும், சம்பந்தரும் பாடிய திருமுறைகளைத் தான் பாடி வணங்குவதாக சுந்தரமூர்த்தி நாயனார் கூறுவதிலிருந்து திருமுறைகளின் மகிமை தெளிவாகிறது. மேலும் சுந்தரரின் பின்வரும் பாடற்பகுதி இக்கருத்துக்குச் சான்றாய் அமைகின்றன.

"நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடியநற்தமிழ் மாலை
சொல்லியவே சொல்லி யேத்துகப்பானை"

சுந்தரர் திருமுதுகுன்றப் பெருமான் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னையும் மணிமுத்தா நதியிலே போட்டு இறையருளால் திருவாரூர் திருக்கோயிலின் அருகேயுள்ள குளத்தில் எடுக்க விரும்பி திருவாரூர் சென்று பரவையாரோடு அங்கு தேடினார். அவர் வாயிலாக செந்தமிழ்ப் பாமாலையைக் கேட்க விரும்பிய சிவபெருமான் பொன் விரைவாகத் தோன்றாதபடி செய்தார். மனம் சோர்ந்த நிலையில் மனமுருகி எட்டு பாடல்களைப் பாடியும் பொன் கிடைக்கவில்லை. பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏத்தாதிருந்தறியேன் இமையோர் தனி நாயகனே"

என்ற ஒன்பதாவது பாடல் பாடியதும் பொன் தோன்ற அதனைப் பெற்று மகிழ்ந்தார் சுந்தரர். சாமகானப் பிரியனான இறைவன் அருளாளர்கள், பக்தர்கள் பாடுகின்ற திருமுறைகளை விரும்பிக் கேட்கும் பாங்குடையவன். ஆகவே சைவ அன்பர்கள், அடியார்கள் திருமுறைகளின் மகிமையை உணர்ந்து அவற்றைப் போற்றி வணங்கிப்பாடிப் பேணுவது தலையாய கடமையாகும். □□

## உனது பாதமெப்போதும் மறவேன்

பிணியோடு பசிவறுமை சிறிதேனும் எனைவந்து
பீடித்த லின்மை வேண்டும்,
பெரும! நின் கதைகளைத் துதிகளைக் கேட்டுமகிழ்
பேறுமீந் தருளல் வேண்டும்,
பணியே புரிந்துநினை நணியே வணங்குமொரு
பக்தியுந் தருதல் வேண்டும்,
பாவியே னாயினுந் தீயனேன் பாலருட்
பார்வைவைத் தாளவேண்டும்,
கணியே! யெனக்குறவர் வரைமே லுதித்தசக
காரணா! பரிபூரணா!
கானவர் கொடிக்குமுயர் வானவர் பிடிக்குமொரு
காந்தனே! மலைவேந்தனே!
பணியாத வர்க்குமருள் தணியா தியானுனது
பாதமெப் போதுமறவேன்,
பாவலா! தேவர் தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே!

**அ. குமாரசுவாமிப் புலவர்**
**மாவைப்பதிகம் (1883)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

- எங்கள் மனைவிளக்கு திருவாட்டி மங்கையர்க்கரசி அம்மையார் நோய்வாய்ப்பட்டிருந்த வேளை யாழ்ப்பாணத்திலிருந்து – கொழும்பு வரை பேருதவி புரிந்த வைத்திய அதிகாரிகட்கும் – மற்றும் மருத்துவ சேவைப் பகுதியினரிப்பட்ட ஊழியர்கட்கும் – உறவினர் நண்பர்கட்கும்,

- இயற்கை எய்தியமை அறிந்து வந்து தேற்றம் செய்தோர் உதவியோர் 22–06–2006 – 06–06–2006 வரையான நாட்களில் பல விதத்திலும் உதவியோர்க்கும்,

- அந்திய நாளன்று பல்வேறு விதத்திலும் வேண்டிய உதவிகள் புரிந்த உறவினர் – நண்பர்கள் – அயலவர் – பெரியோர்கட்கும்,

- அஞ்சலி வெளியீடுகள் செய்தோர்க்கும் – ஊடகங்கள் மூலம் அஞ்சலிச் செய்திகளை வெளியிட்டோர்க்கும் – அஞ்சலி உரைகள் ஆற்றிய பெரியோர்க்கும் – மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலித்தோர்க்கும்,

- தொலைபேசி – தொலைநகல் – கடித மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்கட்கும்,

- குறிப்பாக பான்ட் அணி வகுப்பு மரியாதை செலுத்திய இராமநாதன் கல்லூரிச் சமூகத்தினர்க்கும்,

- தீக்கடன் – நீர்க்கடன் – வீட்டுக்கிரியைகளில் நின்று உதவியோர்க்கும்,

- இன்று வீட்டில் நடைபெறும் புண்ணிய கைங்கரியங்களில் கலந்து கொண்டோர்க்கும்,

- இந்நினைக் கருவூலம் மலர அம்மையார் பற்றிய தங்கள் கருத்துக்களைத் தெரிவித்த பெரியோர்க்கும் – இதனைக் குறுகிய காலத்தில் அச்சிட்டுதவிய பிரகாஷ் பதிப்பகத்தாருக்கும் எம் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



புலவரகம்,
மயிலணி, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாஷ் பதிப்பகம், குரவசை அளவெட்டி வடக்கு, அளவெட்டி. T.P: 077-6273464